ISSN 2815-0139

பொய்கையின்

# பசுமை

பல்சுவை இதழ்

மலர் - 01 பங்குனி 2022 இதழ் 07

## மகளிர் தின சிறப்பு இதழ்



70/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை

ஆசிரியர் : ந.பார்த்தீபன்
(ஓய்வுநிலை உபபீடாதிபதி,
வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி)
தொ.பே. 0776231859
மதியுரை : பொன்னையா மாணிக்கவாசகம்
(மூத்த பத்திரிகையாளர்)
நிர்வாக பொறுப்பு : நா.தயாபரன்
வெளியீடு : பொய்கை வெளியீடு
பதிப்பு : பொய்கை பதிப்பகம்.
தொடர்பிற்கு : ஆசிரியர், "பசுமை"
பொய்கை பதிப்பகம்,
கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா.
தொ.பே.இல.: 0242228088, 0773747137
முகப்புத்தகம் : poihai printers
மின்னஞ்சல் :
pasumaimagazine2016@gmail.com
விலை : ரூபா 70.00

## சந்தா விபரம்

தனிப்பிரதி :- 70.00

ஆண்டுச்சந்தா :- 1000.00

சந்தா கட்டணங்களை இலங்கை வங்கி, பிரதானகிளை கணக்கு இல.9355022, நா.தயாபரன் என்ற கணக்கிற்கோ அல்லது காசுக் கட்டளை மூலமோ மேற்படி முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். வங்கிச் சிட்டையுடன் பெயர், முகவரி, தொ.பே. இலக்கம் என்பவற்றை Viber/Whatsapp/ gmail என்பவற்றின் ஊடாக அனுப்பி வைக்கவும். சஞ்சிகையுடன் பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

## உள்ளே...

| | பக் |
|---|---|
| சர்வதேச மகளிர் தினம்... | 02 |
| நீரழிவிலிருந்து... | 03 |
| அன்புள்ள ரீச்சர்... | 06 |
| தீராத தாகம்... | 10 |
| உலகில் சாதனை படைத்த... | 11 |
| வித்தகி திருமதி வில்லி... | 13 |
| திருக்குறள்,நரியின் ... | 14 |
| குருட்டு இதயங்களுக்கு | 16 |
| சவால்கொண்டெழும் சக்தி... | 17 |
| சமூகம் மற்றும் பெண்களின்... | 20 |
| மூதன்னையின் பாடல்... | 23 |
| கானமயில்நாதன் | 27 |
| சர்வதேச மகளிர்தினம் | 29 |
| தமிழ் இளைய சமுதாயம்... | 31 |
| குறுக்கெழுத்துப்போட்டி | 34 |
| நாகதீபத்தின்... | 37 |
| எனக்குப் பயமாயிருக்கிறது | 39 |
| இலங்கையில் முதல் பெண்... | 41 |
| திறன்களை வளர்க்கும்.. | 44 |
| முன்பள்ளி ஆசிரியர்களின் ... | 49 |
| முறைசார் கல்வியும்... | 52 |
| சக்திதான்... | 54 |
| மலிந்த மரணங்கள் | 56 |

எமது சஞ்சிகையில் வெளியாகும் அனைத்து ஆக்கங்களுக்கும் அவற்றின் படைப்பாளிகளே பொறுப்பு

உங்கள் படைப்புகளை 500 சொற்களுக்கு மேற்படாமல் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

பசுமைக்கு வரும் படைப்புகளை திருத்தம் செய்யும் உரிமை எமக்குண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் இதயத்திலிருந்து

# சர்வதேச மகளிர் தினம்

பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் அங்கீகரிப்பதற்குமே சர்வதேச மகளிர் தினம் 1913ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது. கல்வி, பொருளாதாரம், சுதந்திரம், சம உரிமை ஆகியவை பாலின வேறுபாடின்றி பெண்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே மகளிர் தினத்தின் முக்கிய நோக்கம்.

எட்டு மணி நேர வேலை,வேலைக்கு ஏற்ற ஊதியம், பெண்களை அடிமைகளாக நடத்துவதிலிருந்து விடுதலை போன்ற அம்சங்களை பெண்கள் சமூகத்திடம் எதிர்பார்க்கின்றனர்.

பெண்ணடிமை, பெண்களை இழிவு படுத்துதல், பெண்களை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துதல், பெண்தானே என ஒதுக்குதல் என்பன ஓரளவு குறைந்துள்ள போதிலும் பத்திரிகை செய்திகள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள்...போன்றவற்றில் இன்றும் அந்த அவலங்கள் தொடர்வதை அவதானிக்க முடிகின்றது.

சமத்துவம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, அன்பு, கருணை...போன்றன பெண்களுக்குத் திருப்தியளிப்பதாகவும் மகிழ்ச்சி யளிப்பதாகவும் இல்லை.

மானுடகுல விடுதலையென்பது பாலின சமத்துவத்துடன் கூடிய வர்க்க விடுதலையே. இன்று மகளிர்தினம் என்பது சம்பிரதாயபூர்வ தினமாகக் கொண்டாடப்படுகின்றதேயொழிய உண்மையில் பெண்களின் உரிமைகளை நடைமுறையில் முழுமையாக அங்கீகரிப்பதாக அமையவில்லை என்பது கவலைக்குரியது.

எனவே, மகளிர் தினம் என்பது வெறுமனே கொண்டாட்டத்திற்குரியதன்று. மகளிரைப் பல்வேறு நிலைகளிலும் அர்த்தமுள்ள வகையில் போற்றிக் கொண்டாடுவதே இன்றைய தேவை.

பசுமை மகளிரைப் போற்றுவதிலும் அவர்களின் பெருமைகளை உலகறியச் செய்வதிலும் திடசங்கற்பம் பூண்டு செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த இதழ் மகளிர்தின சிறப்பிதழாக வெளிவருவதையிட்டு பசுமை மகிழ்ச்சியடைகிறது. அனைவருக்கும் எமது மகளிர் தின வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவிலிருந்து காத்துக்கொள்வதற்கான வாழ்வியல் மாற்றங்கள்

வைத்தியர் சரஸ்வதி பிரபாகரன்

நவீன மருத்துவ விஞ்ஞானம் சுட்டிக் காட்டியுள்ளவாறு உணவு சமிபாட்டு செயற்பாட்டுக்குத் தேவையான உறுப்பான கணையம் பலவீனமடைந்து அதில் உற்பத்தியாகும் இன்சுலின் ஹோர்மோன் குறைவடைவதாலோ அல்லது உற்பத்தியாகும் இன்சுலின் ஹோர்மோன் வலுவிழந்து இருப்பதனாலோ இரத்தத்தில் குளுக்கோசு அளவு அசாதாரணமாக அதிகரித்தலே நீரிழிவு நோயாகும். போட்டியுடன் கூடிய ஓய்வற்ற வாழ்க்கை முறையால் ஏற்படும் மன அழுத்தம் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கு மேலும் ஒரு முக்கிய காரணம் என கண்டறியப் பட்டுள்ளது.

பரராசசேகர பிணியறிதல் வைத்தியத் திரட்டு "எந்த நீர்க்கழிச்சலானலும் முற்றினால் மதுமேகம் அல்லது நீரிழிவு அல்லது சலரோகம்" எனக் கூறுகின்றது. அதன் குணம் மதுவைப் போல் தடித்த நீரிறங்கும், கடுக்கும், தாமதிக்கப்படும், நீரில் இச்சை, நாவரளும், குளிர்ந்த சிறுநீரில் ஈ, எறும்பு விழும்.

உடலின் மென்மையான தாதுக்கள் வெளியேறுவதால்ஏற்படும் நோய்களை பிரமேக நோய்கள் என ஆயுர்வேதம் கூறுகின்றது. அந்த 20 பிரமேக நோய்களின் உச்சக்கட்ட நிலையாக நீரிழிவு நோயைக் குறிப்பிடலாம். 10 வகை கபம், 6 வகை பித்தம், 4 வகை வாதம் சம்பந்தப்பட்ட நீரிழிவு நோய்கள் என 20 வகையான நீரிழிவு நோய்கள் காணப்படுகின்றன. இவற்றில் 4 வகை வாதம் சம்மந்தப்பட்டவை அவற்றில் 2 வகை மருந்திற்கு கட்டுப்படும் 2 வகை மருந்திற்கு கட்டுப்படாது.

மனித வாழ்வில் நமக்கு இருக்கும் நீரிழிவு நோயை புரிந்து கொள்வதற்கு பின்வரும் உடல் அமைப்பை உடையவர்களில் நீரிழிவு நோய் இருப்பின் எவ்விதமான அறிகுறிகள் காணப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

### கபம் (சளி)உடலமைப்பு

உடல் எடை அதிகரிக்கும்; உடல் சோர்வு; படுத்தாலும் உடலில் வலி; மனக்குழப்பம்; வெளியில் வர முடியாமல் தனித்திருத்தல்; அதிக பசி ; சிறுநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி கழித்தல் (1அல்லது2 மணிக்கு 1 தடவை) ; இனிப்பின் மேல் அதிக பிரியம்; தாம்பத்திய உறவில் அதீத ஈடுபாடு; கடுமையான மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலங்கழித்தல்

பித்த உடலமைப்பு

ஏதாவது தோல் சம்பந்தப்பட்ட நோய்; சமிபாட்டுக் கோளாறுகள்; அமிலத் தன்மை காரணமாக அஜீரணம் ஏற்பட்டு அமில புரையேறல் ; கண் எரிச்சல்; கண் சிவத்தல்; கால் கரப்பான் (எக்சிமா); மலம் இளகிப் போதல் **(irritable bowl syndrome)**; கடுமையான கோபம்; கை, கால் கடுமையான எரிச்சல்; கண் நரம்பு பாதிப்பு - பிரயாகபித்தம் பாதிப்பால் பார்வையின்மை (diabetic retinotopy); கார உணவு, எண்ணெய், கொழுப்பு, புளித்த உணவு என்பவற்றை அதிகம் உண்பர்.

வாத உடலமைப்பு

எடை குறையும்; கை, கால், உடல் வலி; பசியின்மை, அஜீரணம்; மலச்சிக்கல்; கடுமையான மனச்சோர்வு; துவர்ப்பு, புளிப்பு மேல் அதிக ஆர்வம்; நாவரட்சி, கண் வரட்சி; சிறுநீர் கழிக்கும் போது அரிப்பு, வெடிப்பு என்பன சிறுநீர் வெளிப்பாதையில் காணப்படும்; கடுமையான தோல் வரட்சி, தலைமுடி குறைதல்; இனப் பெருக்க உறுப்புக்கள் செயலிழத்தல்.

மேற்படி அறிகுறிகளைக் கொண்டு நமக்கு இருக்கும் நீரிழிவு நோயை அடையாளம் காணலாம்.

இனி நமக்கான தனியான உணவு முறைகள் பற்றி பார்ப்போம்.

நீரிழிவு நோய்க்கு உணவுப் பழக்கங்களும் உடலுழைப்பு இன்மையும் முக்கிய காரணங்கள். இனிப்பு, மாவு, கொழுப்பு நிறைந்த உணவுகளை அதிகளவில் உள்ளெடுத்தல் போன்றவை நீரிழிவு நோய் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய உணவாகும்.

தற்போது குழந்தைகள் மெய்நிகர் கற்றலில் ஈடுபடுவதால் அவர்கள் உடற்பயிற்சி, உடலுழைப்பு அற்ற வாழ்க்கை முறைக்குத் தள்ளப் படுகின்றனர். இதனால் நீரிழிவு நோய் போன்ற இனனோரன்ன பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டி உள்ளது.

எனவே ஆரோக்கியம் தொடர்பான வாழ்வியல் முறைகளை பார்ப்போம்.

உணவு

நாம் பாரம்பரியமாகக் கடைப்பிடித்து வந்த சமையல்முறைக்கு மாற வேண்டும். சோறு சமைக்கும் போது பானையில் தண்ணீர் எடுத்து சூடாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதிக்கும் போது அரிசியிட்டு, அரிசி அவிந்த பின், கஞ்சி வடித்து சோறாக்கி அதனை சாப்பிட வேண்டும்.

காய்கறிகளை சமைக்கும் போது அவியல், மசியல், துவையல், பொரியல் போன்ற முறைகளை பின்பற்றி செய்வதன் மூலம் சமிப்பாட்டுடன் தொடர்புடைய சகல செயற்பாடுகளும் தூண்டப்பட்டு சீராக உணவு ஜீரணமடைந்து ஆரோக்கியத்துக்குத் தேவையான சத்துகள் உடலில் கலக்கும்.

**உடற்பயிற்சி**

45நிமிடம் நடைபயிற்சி செய்தல் வேண்டும். ஒருவர் 45நிமிடம் 6000 அடிக்கு மேல் நடக்க வேண்டும். இவ்வாறாயின் உடற்பயிற்சி மூலம் கிடைக்கும் உடலுக்குரிய பயனை அடைய முடியும்.

**மூச்சுப்பயிற்சி, தியானம்**

முறையான குருவிடம் முழுமையாக கற்றபின் சரியான நேரத்தில், சரியான முறைகளைப் பின்பற்றி செய்வதன் மூலம் அதன் பலனை பெற்றுக்கொள்ள முடியும். மூச்சுப்பயிற்சி 15 நிமிடம் அல்லது ஒரு தடவைசெய்ய வேண்டும்.

**வாழ்வியலில் அன்றாடம் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களைப் பார்ப்போம்**

**காலைக்கடன், குளித்தல், மூச்சுப்பயிற்சி, உணவு உண்ணல், நித்திரை**

**நாளாந்தம் வேலை செய்யும் போது கடைப்பிடிக்கவேண்டியவை:-**

வேலை செய்யும் போது முழுமனதுடன் வேலையில் ஈடுபட வேண்டும். உட்கார்ந்து வேலை செய்பவர்கள் 2.00 மணி நேரம் உட்கார்ந்து இருந்தால் பின் எழுந்து நடக்கவேண்டும் .தண்ணீர் குடிக்க வேண்டும்.

நாம் செய்யும் வேலை எனக்காகவும் எனது குடும்பத்திற்காகவும் சமூகத்திற்காகவும் என நேர்மறையான எண்ண ஆற்றலோடு செய்ய வேண்டும்.

மேற்கண்டவற்றை நாம் முறையாகக் கடைப்பிடித்தால் நீரிழிவின் தாக்கத்திலிருந்து எம்மைக் காத்துக்கொள்ள முடியும்.

அட்டைப்படத்தை வரைந்தவர்: திருமதி. இ.விஜயலட்சுமி
படங்கள் : செல்வி.வே.குயிலினி, திரு.நா.ஆனந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள ரீச்சர்...

சம்பூர் சமரன்

மாலைசூரியன் மயங்கி ஒருமணி நேரம் கடந்திருக்கும். தொலைபேசியிலிருந்து அழைப்பொலி ஒலித்துக்கொண்டிருந்தது. சரண் தொலைபேசியை எடுத்துப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! எப்போதோ சேமித்து வைத்த இலக்கம், அதை தொலைபேசி திரையில் கண்டவுடன் சரணுக்கு ஆனந்தமும் அதிர்ச்சியும், கண்கள் அகல விரிந்து, அன்பும் பெருகியது. ஆம்!

அநத் அழைப்பு அவனது அன்புக்குரிய ரீச்சரிடமிருந்து வந்திருந்தது.

மறுபுறம் ஒருகுரல், "ஹலோ, சரண் என்னை நினைவிருக்கா" என்று கேட்டது. பேச வார்த்தையில்லாமல் தடுமாறிக்கொண்டிருந்த சரணும், "ஓம் ரீச்சர் நினைவிருக்கு, அன்பும் பாசமும் நிறையவே எனக்குத் தந்த வர் நீங்கள்" என்றான். "சரி இப்போ என்ன செய்கிறாய்? நான் தான் கோல் பண்ணி பேச வேணும் போல" என ரீச்சர் கேட்க, "ஐயோ அப்படி இல்ல ரீச்சர் நான் இப்போ யுனிவர்சிட்டி முடிச்சிற்று வேலைக்காக காத்திட்டு இருக்கன்" என்றான். சிறிது நேர உரையாடலின் பின்னர் ஒருநாள் ரீச்சரை வந்து பா்ர்ப்பதாக கூறி தொலைபேசியை நிறுத்திவிட்டு வீட்டு முற்றத்தில் இருந்த மாமரத்தில் கட்டியிருந்த ஊஞ்சலில் இருந்து யோசனையில் ஆழ்ந்தான்.

சரண் உயர்தரம்வரை விடுதியில் தங்கிப் படித்தான். பெரிய நகர பாடசாலையில் கற்று பல்கலைக்கழகம் சென்றான். அவன் உயர்தரம் படிக்கும் போது நாடகப்பாட ஆசிரியராக வந்தவர்தான் சாரதா ரீச்சர். மிகவும் சாந்தமான குணம், அமைதியான சுபாவம் கொண்டவர். முதல் நாள் வகுப்பிலேயே பிள்ளைநேய அணுகுமுறையோடு மாணவர்களுடன் செயற்படுவார். சரணுக்கு முதல்நாளே ரீச்சரை பிடித்துவிட்டது. விடுதியில் தங்கியிருந்து படித்ததால் தன் குடும்பத்தினரிடம் அன்பை நேரடியாகப் பெற முடியவில்லை.

படிப்பில் கெட்டிக்காரனாக இருந்தான். எப்போதும் முதலாவதாக வருவான். எல்லா பாடங்களிலும் நல்ல புள்ளிகளைப் பெறக்கூடியவன். இருந்தாலும், கூச்ச சுபாவம் மற்றும் மற்றவர்களோடு பெரிதாக பேசி பழகுவது குறைவு என்பதால் நாடக செயன்முறைகளில் அவ்வளவு ஈடுபாடு காட்டாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுங்கியே இருப்பான். ஆகவே உயர்தரப் பரீட்சையில் நாடக செயன் முறைப் பரீட்சையை எவ்வாறு செய்யப்போகிறேன் என்ற கவலையும் அவனுக்கு இருந்தது. .ரீச்சர் சரணின் நிலையை புரிந்து கொண்டு அவனுக்கு நிறைய ஆலோசனைகளையும் வழங்கி ஊக்கப்படுத் தல்களையும் மேற்கொண்டார். ஒருமுறை வலயக்கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட நாடகப்போட்டியின் போது சரணையும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வைத்து விட்டார். ஒருவாறு தயக்கத்துடன் நடித்து ஓரளவு தேறிவிட்டான்.



அதே ஆண்டு கல்லூரியின் ஒளி விழாவிற்கான நாடகம் ஒன்றிற்கு தகுந்த மாணவர்களை பொறுப்பான ஆசிரியர் கோரிய போது ரீச்சர் சரணையும் அவனது நண்பனையும் பரிந்துரைத்தார். அது மட்டுமன்றி நல்ல பயிற்சியும், ஒத்திகையும் சிறப்பாக செய்வித்தார். ஒளி விழா நிகழ்வின் போது மேடையில் ஏறிய சரண் அரங்கில் பார்வையாளர்கள் நிறைந் திருப்பதைக் கண்டு ஒரு கணம் திகைத் துப் போனான், என்றாலும் சாரதா ரீச்சரை மனதில் நினைத்துக் கொண்டு தைரியத்தை வரவழைத்து நாடகத் தின் பிரதான பாத்திரத்தில் சிறப்பாக நடித்தான். நாடகம் முடிந்தவுடன் அதிபர் உட்பட வந்திருந்த அனைத்து விருந்தினர்களும் ஏனைய ஆசிரியர்களும் சரணைப் பாராட்டினார்கள். அனைவரினதும் பாராட்டையும் பெற்றதால் மகிழ்ச்சி அடைந்தான். தனது பயம் நீங்கி சாரதா ரீச்சரின் துணையோடு தான் முன்னேற்றம் கண்டதாக உணர்ந்தான்.

நேராக ரீச்சரிடம் சென்று தனது முன்னேற்றம் குறித்து சொல்லி நன்றி கூறினான். ரீச்சரும் சரண் மென்மேலும் முன்னேற தனது ஆசிகளை வழங்கினார். சாரதா ரீச்சர் தவணைப் பரீட்சைகளுக்கான கட்டணங்க ளையும் அவனுக்குத் தெரியாமலே அவனது வகுப்பாசிரியரிடம் கட்டிவிடுவார். தனது மகனாகவே எண்ணிப் பார்த்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் நாடகப் பயிற்சிப் பட்டறைக்கு சென்று வரும்போது கடையில் ஏதாவது வாங்கி சாப்பிடச் சொல்லி ரீச்சர் கொடுத்த நூறு ரூபா தாளை இன்னும் தனது நாட்குறிப்பு புத்தகத்தில் பத்திரமாக பெயர் எழுதி வைத்திருந்தான். அதை ஒவ்வொரு முறை பார்க்கும் போதும் அவனுக்கு பாடசாலையின் நாட்கள் கண்ணின் முன்னே வந்து போகும். அந்நேரங்களில் ஏக்கமும், கவலையும் அவனுள்ளே குடியேறிக்கொள்ளும். இறுதி உயர்தரப் பரீட்சை நெருங்கும் காலத்தில் சுகயீனம் காரணமாக சாரதா ரீச்சரால் பாடசாலைக்கு வரமுடியாமல் போனது இருந்தாலும் பதிவுத் தபால் மூலம் பாடக் குறிப்புகளை பாடசாலைக்கு அனுப்பி வைத்திருந்தார்.

சரண் இப்போது உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்று ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டன. இடையில் ஒரு தடவை ரீச்சருடன் தொலை பேசியில் பேசியிருக்கிறான். அது யூனிவர்சிட்டி நுழைவு கிடைத்துவிட்ட தாக சாரதா ரீச்சரிடம் கூறியது. ரீச்சரை அவருடைய வீட்டிலேயே வந்து ஒருநாள் பார்ப் பதாகவும் கூறியிருந்தான். இருந்தாலும் ஒருமுறை கூட சென்று பார்க்கவில்லை. பல்கலைக்கழகப் படிப்பு மற்ற வேலைகள் என்று அவன் அதை மறந்தே விட்டான். தற்போது பல்கலைக்கழகப் படிப்பு முடிந்து வீட்டிலேயே தான் இருக்கின்றான். இந்த சமயத்திலேதான் சாரதா ரீச்சரின் தொலைபேசி அழைப்பு வந்தது. அவனுக்கு அவ்வழைப்பு மனதில் நெருடலாகவே இருந்தது. கூடவே குற்ற உணர்ச்சியும் அவனை வாட்டியது.

சாரதா ரீச்சரின் தொலைபேசி அழைப்பினை எண்ணி அன்றைய நாள் இரவு தூக்கம் வரவில்லை. அடுத்த நாள் தனது பாடசாலை நண்பன் பிரசாந்தனை அழைத்து ரீச்சர் தொலைபேசியில் அழைத்துப் பேசியதை கூறினான். பிரசாந்தனும் ரீச்சரிடம் நல்ல அன்பு கொண்டவன் எனவே, அந்த வாரம் வருகின்ற சனிக்கிழமை ரீச்சரின் வீட்டுக்குச் செல்வதாகவும் அப்போதுதான் பாடசாலை விடுமுறை நாள் வீட்டிலேயே ரீச்சர் இருப்பார், அவரிடம் சொல்லாமல் போனால் இன்ப அதிர்ச்சியாக இருக்கும் என்று இருவரும் முடிவு எடுத்துக் கொண்டனர்.

சனிக்கிழமையன்று பக்கத்து மாவட்டத்தில் உள்ள ரீச்சரின் சொந்த ஊருக்கு இருவரும் பயணமானார்கள், போகும் வழியில் ரீச்சருக்குக் கொடுப்பதற்காக பரிசுப் பொருட்களும் வாங்கிக் கொண்டார்கள். ரீச்சருடன் பாடசாலையிலிருந்த காலங்களையும் இடையிடையே நினைவு கூர்ந் தார்கள். ஒருவாறு ரீச்சரின் வீடு உள்ள வீதியில் நுழைந்தார்கள். அந்த வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் மூலையில் அறிவித்தல் பதாகைகள் நிறையவே கட்டப் பட்டிருப்பதைக் கண்டார்கள். சரண் அதை கூர்ந்து கவனித்தான். உடனே பிரசாந்தனிடம் வாகனத்தை நிறுத்தச் சொல்லி பதாகையை அவனிடம் காட்டினான். இருவரும் விழிகளை அகல விரித்து அதிலிருந்த படத்தைப் பார்த்தார்கள். சரணின் மனம் உடைந்து குமுறியது. இன்று எப்படியாவது ரீச்சரைப் பார்த்துவிட வேண்டும், அவருக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க வேண்டுமென நினைத்த அவனுக்கு துன்ப அதிர்ச்சியே காத்திருந்தது. பேரிடர் வந்து தாக்கியது. பேச முடியாமல் திணறினான். விம்மி விம்மி அழுதான். கண்ணீர் ஆறாகப் பெருகியது. இருவரும் துன்பத்தில் ஆழ்ந்தனர். அவர்கள் கொண்டு வந்த பரிசுப்பொருட்களை நிலம் தாங்கிக் கொண்டது. சரணை பிரசாந்தன் தாங்கிக் கொண்டான். இருவரின் அடங்காத அழுகையைப் பார்த் து ரீச்சர் சிரித்துக்கொண்டிருந்தார் மரண அறிவித்தல் பதாகையில்...

# மகளிர் தின வாழ்த்துப் பாடல்

திருமதி இ.மோகனா, ஓமந்தை

ராணி மங்கம்மாள்



பெண்ணென்று கொண்டாடு உன்னை
பெண்ணே நீ கொண்டாடு உன்னை
பெண்ணென்று கொண்டாடு உன்னை (பெண்)

வலிமை வாழ்வுனது வலிகள் தாங்கிடு நீ
புலிபோல் வேகம் கொள் தடைகள் தாண்டிடு நீ
மண்ணில் உன் தேவை எண்ணெழுத்தில்
அடங்காது
எவர்தான் தாங்கிடுவார் உன் போல் பாரத்தை
நிமிர்வாய் நீ நடந்திடு உலகம் உன் பின்னாலே
பெண் என்று கொண்டாடு உன்னை(பெண்)

அடிமைச் சங்கிலியை உடைத்தெறிந்து
வேதனைகள் சோதனைகள் பலகடந்து
எதையும் தாங்கும் இதயம் கொண்டவள்
பெண்ணென கம்பீரமாய் தலை உயர்ந்திடுவாய்
பாரதி கண்ட புதுமைப் பெண்மணிகள்
நாமென நாளைய சமூகத்தை மாற்றுவோம்(பெண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத தாகம்...!

ஜனாப் என்.எம். சஜா



மறுபடியும்...
உன் அந்தரங்க நாடகம்
அரங்கேறுகிறது...
எனக்குள் நிகழ்ந்து விடுகின்ற
ஏமாற்றங்களை
என்னுள்ளே புதைத்துக்
கொண்டும்...
ஊமையின் கனவினைப் போல
வெளிக்காட்ட முடியாத
உணர்ச்சிகளை அடக்கிக்
கொண்டும்...
தோல்வியின்
இயலாமைகளைச் சொல்ல
முடியாமல் சகித்துக் கொண்டும்...
நேற்றைய விடியாத
வலி கலந்த இரவுகளை நான்
நினைவுறுத்திய பின்னும்...
இரண்டு வயதுக் குழந்தையின்
சிணுங்கல்களாய்...
கெஞ்சுதல்களாய்... பிடிவாதமாய்...
ஏன் அத்து மீறல்களாய்க் கூட
ஆடை களைந்து
எனக்குள் நுழைகின்றாய்.
வேஷியாய்... தாதியாய்... தாயாய்...
தாரமாய்...
இன்னும் பல அவதாரமாய்
என் சுயத்தை இழந்து
அனைத்தையும் அர்ப்பணித்தபடி...
உனக்காக நான்.
சுய நலத்தின் விம்பமாய்...
ஆக்ரோசத்தின் உச்சமாய்... நீ...
மீளவும்...
முடிவிலியாய் தொடங்கி முடிந்து
முடிந்து தொடங்கித் தொடர்கிறது
உன் நாடகம்.
மெத்தைகளை... மலர்களை...
மாலைகளை...
வான் நிலவு போல் ஒளிரும்
வளையல்களை...
வண்ணத்துப் பூச்சியின்
அழகினைத் தோற்கடித்து விடும்
ஆடைகளை... இன்னும்
எத்தனையோ வகையறாக்களை...
வாங்கித் தந்து விட்டு
வெற்றிக் களிப்புடன்
எகத்தாளமாய்...
வாய் கிழியப் பேசுகின்றாய்...
என்னை திருப்திப் படுத்தியதாக...
சரிதான்...!
நீ திருப்திப்படுத்தியது
என்னையா...?
அல்லது
அவற்றை உனக்குக் கொடுத்த
வியாபாரிகளையா...?
சொல்...!
உண்மையில்...
உணர்வுகளை புரிந்து கொள்ளவே
தெரியாத ஜென்மம் யார்...
நீயா...?
இல்லை நானா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் சாதனை படைத்த 'முதல்' பெண்கள்

தொகுப்பு: மேழிக்குமரன்

முதல் மிஸ் வேர்ல்டு : கெர்ஸ்டின் கிகி ஹாக்கோன்சன், சுவீடன் (1951)

முதல் மிஸ் யூனிவர்ஸ் : அர்மி குசேலா, பின்லாந்து (1952)

செயற்கை இதயம் பொருத்திக் கொண்ட முதல் பெண்மணி : மேரி லுண்ட் (1986)

உலக சுகாதார அமைப்பின் அசெம்ப்ளி தலைவரான முதல் பெண்மணி : ராஜ்குமாரி அம்ரித் கௌர், இந்தியா (1950)

சர்வதேச நீதிமன்றத்தின் முதல் பெண்தலைவர்: ரோஸலின் ஹிக்கின்ஸ், பிரிட்டன் (சர்வதேச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியும் இவரே) (2006, பிப்ரவரி 6)

ஒரு செய்தித்தாளின் முதல் பெண் எடிட்டர் : ஆன் ஃபிராங்ளின், தி நியூபோர்ட் மெர்க்குரி (1762)

வரலாற்றில் முதல் புகழ்பெற்ற பெண்மணியாகப் பதிவாகியவர் : ஹாட்ஷேப்கட் (கி.மு. 1479)

உலகின் முதல் பெண் பிரதமர்: சிரிமாவோ பண்டாரநாயகே, இலங்கை (1960)

முதல் பெண் அதிபர் : இஸபெல் பெரோன், அர்ஜென்டினா (1974)

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரு நாட்டின் பெண் தலைவர்: விக்டிஸ் ஃபின் போகாடோட்டிர், அதிபர், ஐஸ்லாந்து (1980)

உலகின் முதல் ஹெலிகாப்டர் பெண் பைலட் : ஹன்னா ரெயிட்ஷ், ஜெர்மனி (1938)

ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற முதல் பெண்மணி : சார்லோட்டே கூப்பர், பிரிட்டன், ஒற்றையர் டென்னிஸ்

உலகின் முதல் பெண் ஒலிம்பிக் மாரத்தான் சாம்பியன்: ஜோன் பெனோயிட், லாஸ் ஏஞ்சல்ஸ் (1984)

ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் பெண்மணி: கெர்ட்ரூட் எடர்லே, 14 மணி 39 நிமிடங்கள் (1926, ஆகஸ்ட் 3)

வடமுனை சென்றடைந்த முதல் பெண்மணி : ஆன் பான்ரோஃப்ட், அமெரிக்கா (1986)

நூறு நாட்களில் தனியாக உலகைப் படகு மூலம் சுற்றி வந்த முதல் பெண்மணி : எர்லென் மக் ஆர்தர், ஆங்கில கடற்பயணி (2001)

தனியாக உலகைப் பறந்து சுற்றிய முதல் பெண் மணி : ஜெர்ரி ஃ பிட்ரிட்ஸ் மோக், 29 நாட்கள் (1864)

எவரெஸ்டை அடைந்த உலகின் முதல் பெண்மணி : ஜீங்கோ தாபேய், ஜப்பான் (1975 மே, 16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்சிஜன் இன்றி எவரெஸ்டில் ஏறிய முதல் பெண்மணி : லிடியா பிராடே, நியூசிலாந்து (1988)

விண்வெளி சென்ற முதல் பெண்மணி: வாலென்டினா தெரஷ்கோவா, ருஷ்யா (1963)

விண்வெளியில் நடந்த முதல் பெண்மணி : காத்ரின் டி. சுல்லிவன், சாலஞ்சர் பயணம் (1984)

முதல் விண்வெளி பெண் சுற்றுலாப் பயணி : அனுஷ் அன்சாரி, இரான் (2006)

சூப்பர்சானிக் கான்கார்ட் விமானத்தின் முதல் பெண் பைலட் : பார்பரா 'ார்மர், பிரிட்டீஷ் ஏர்வேஸ் (1993, மார்ச் 25)

முதல் பெண் ஏர்பஸ் பைலட் : துர்பா பானர்ஜி, இந்தியா (1987)

# மண்ணரிப்பும் தீங்குகளும்

செல்வி.பி.பிரபாஜினி
வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி

மண் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்லல் மண்ணரிப்பு எனப்படும். நீர், காற்று, மழை, வெப்பம் என்பன இதனை ஏற்படுத்தும் காரணிகளாகும். மண்ணின் மேற்பகுதியில் வளமான மண் காணப்படுகிறது. வளமான மண் மழை நீர், புயல் காற்று, கடும் வெப்பம் ஆகியவற்றால் எடுத்துச் செல்லப்படும்போது மண்ணரிப்பு ஏற்படுகின்றது. மண்ணின் வளம் குறைவடைந்து அதேவேளை மண் சரிவு அதிகரிக்கும் போது அதிகமாக மண்ணரிப்பு நிகழுகின்றது. காடுகளை அழித்தல், மண்ணகழ்தல், புதிய கட்டடங்கள் கட்டுதல் போன்ற செயற்பாடுகளால் மண்ணின் வளமான தன்மையுடன் இயற்கையும் பாதிப்படைகிறது.

மண்ணரிப்பைத் தடுக்க வரம்புகளை அமைத்தல், கால்வாய்கள் (கான்களை) அமைத்தல், மூடு பயிர்களை வளர்த்தல், கல்வேலி அமைத்தல், பயிர்களுக்கிடையில் வைக்கோல், தும்புச்சோறு, இலைச் சருகுகள் போன்ற பொருட்களை இடல், மரக்கன்றுகளை நடல், மண் திட்டுகளை அமைத்தல், சமவுயரக்கோட்டு வடிகால் அமைத்தல், படிமுறைப் பயிர்செய்தல் போன்ற நடவடிக்கைகளை செய்ய வேண்டும். மண்ணரிப்பைத் தடுக்கும் தோழன் மரம். மண் வளத்தைக் காக்கும் காவலன் மரம். இதை உணர்ந்து மரம் வளர்ப்போம். மண் அரிப்பை தடுத்து மண் வளத்தை காப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகி திருமதி.லில்லிவுளோறா நடேசமூர்த்தி

ஆசிரியராக அதிபராக அளப் பெரும் சேவைகளை அர்ப்பணிப்புடன் செய்து வித்தகியென புகழப்பட்ட திருமதி. லில்லிவுளோறா நடேச மூர்த்தியை இந்த வருட மகளிர் தினத்தில் கௌரவிப்பதில் பசுமை மகிழ்ச்சி அடைகிறது.

முப்பத்தெட்டு வருட காலம் கல்விச்சேவை புரிந்தார். பதின் மூன்று ஆண்டுகள் அதிபராக வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கடமையாற்றி அறுபதாம் வயதில் மணிவிழா கண்டவர்.



ஐந்தாம் வகுப்பு வரை இருந்த பாடசாலையை ஒன்பதாம் வகுப்புவரையும் பின்னர் பதினோராம் வகுப்புவரையும் தரமுயர்த்தி பல சாதனைகளைப் புரிந்தவர்.

ஏழ்மையான மாணவர்களையே கொண்ட இப்பாடசாலையில் தனது முகாமைத்துவ திறன்களால் ஜனநாயக பண்புகளால் ஆசிரியர் குழாத்தை ஒரே குடும்பமாக்கி, பணிகளைப் பகிர்ந்தளித்து, வலயக் கல்வி பணிமனையுடன் இணைந்து, பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுத்து இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டார்.

2007ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் வலய மட்டத்தில் உயர் சித்தியை(100வீதம்) பெற வைத்தார்.இதே ஆண்டு முதல் முறையாக 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 5 மாணவர்களை சித்தி பெற வைத்தமைக்காகவும் மேலும் 5 மாணவர்களை 100 புள்ளிகளுக்கு மேல் பெறவைத்தமைக்காகவும் வலயக் கல்வி அலுவலகத்தால் கௌரவிக்கப் பட்டார்.

சாரணியராக தன்னை இணைத்துக் கொண்ட தால் ஆசிரியர் பணி ,அதிபர் பணி என்பவற்றிலிருந்து ஓய்வு பெற்ற போதும் சாரணியப் பணிக்கு ஓய் வில்லை என்பதால் இன்றும்கூட தன் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் பெருந்தகையை போற்றுவோம்.

தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்
நீங்க நிலம் ஆள்பவர்க்கு

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க தனது குறிக்கோளை நிறைவேற்ற இன்றுவரை உழைத்துக் கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

செல்வி முகுமுதினி, அருளகம், வவுனியா.

தமிழில் உள்ள நீதி நூல்களுள் உலகப் புகழ்வாய்ந்த ஒப்பற்ற நூலாக விளங்குவது திருக்குறள். சங்க மருவிய கால முற்பகுதியில் எழுந்ததாகக் கூறப்படும் இந்நூலில் கூறப்படாத விடயங்களே இல்லை. எந்நாட்டவர்க்கும் எச்சமயத்தவர்க்கும் பொதுவான கருத்துகளை கூறும் நூலாக இது விளங்குகின்றது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. முப்பானூல், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, பொதுமறை எனப் பல பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. ஏழு சீர்களைக்கொண்ட ஒன்றே முக்கால் அடியிலான குறள் வெண்பாவால் ஆக்கப்பட்டது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய முப்பெரும் பிரிவுகள் உடையது. 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் கொண்டது.

திருக்குறள் ஒரு மரத்தின் இருகிளைகள் போன்று மனிதன் செல்ல வேண்டிய நன்மை தரும் வழியையும் செல்லக்கூடாத தீமை தரும் வழியையும் எடுத்தியம்புகிறது. மனிதனை மனிதனாக வாழ வைக்க திருக்குறள் ஆயுதமாக உள்ளது. ஒவ்வொரு குறளும் மனிதனை நல்வழிப்படுத்த ஒரு சிறு துளி தேன் போன்ற கருத்தை கொண்டிருக்கிறது. வாழ விரும்பியவன் வாழத் துடிப்பவன் எழுந்து நின்று ஏறிச் செல்ல திருக்குறள் ஓர் ஏணியாகும். நீதிவழி நின்றும் பிறருக்கு எடுத்துச் சொல்லியும் வாழ்வதற்கு ஓர் அருமருந்து இது. திருக்குறள் நமது வாழ்வு சிறக்கவும் நமது நடைமுறை வாழ்க்கையை கொண்டு செல்லவும் உதவுகிறது.புதுமைக் கருத்துக்களையும் புரட்சி உள்ளத்தையும் கொண்ட ஒப்பற்ற புலவர் வள்ளுவரே. அவரது ஒப்பற்ற கருத்துக்களையும் சிந்தனைகளையும் ஆழ்ந்து நோக்கும் போது நமது வாழ்வு சிறக்கும்.

புதிய சொல்லாட்சி, ஆராய்ச்சி நோக்கு, இறுக்கமான தன்மை.. என வள்ளுவர் ஏனைய புலவர்களிலிருந்து வேறுபடுகிறார்.ஏனைய புலவர்கள் சொன்ன கள்ளுண்ணல், சூது, வரைவின் மகளிரிடம் செல்லல் போன்றவற்றை தீமை பயப்பன எனச் சொல்லி வேறுபட்டு நிற்கிறார்.

திருக்குறள் மனித சமுதாயம் முழுவதற்கும் வழிகாட்டி நிற்கும் சிறந்த நூல்.எக்காலத்துக்கும் பொருந்தும் தன்மை பெற்றது.நாமும் படித்து அதன்படி வாழ்வோம்.

வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்த வான்புகழ் பெற்ற தமிழ்நாடு என்று மகாகவி பாரதியார் கூறியது வள்ளுவரின் சிறப்பை எமக்கு உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரியின் தந்திரம்

செல்வி.முகுந்தன் ஹர்சவி
தரம் 4, வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி., வவுனியா

ஒரு பாட்டி வடை சுட்டுக்கொண்டு இருந்தா.

பசியோடு வந்த காகமொன்று ஆச்சியை ஏமாத்தி வடை யொண்டை எடுத்துக் கொண்டு போய் மரத் திலிருந்து சாப்பிடுகிறது.


அந்த வழியால் பசியோடு வந்த நரிக்கு காகத்தின்ரை வடையைப் பறித்துச் சாப்பிடும் எண்ணம் வந்தது.

காக்கையாரே...காக்கையாரே...நீ நல்லா பாடுவாயாமே.உன்ரை குரல் எவ்வளவு இனிமையாக இருக்கிறது. ஒரு பாட்டுப் பாடி என்னை மகிழ்விக்கிறாயா என்று கேட்டது.

ஓகோ அப்படியா. என்று நரியின் தந்திரம் தெரிந்த காகம் வடையைக் காலில் வைத்துக் கொண்டு கா...கா என்று பாடியது. சரி சரி என சொல்லிக் கொண்டு, நரி பாட்டைக் கேட்டபடி காக்கையாரே அன்ன நடையிலும் பார்க்க உன்னுடைய நடை எவ்வளவு அழகு. நீ ஆடினா அதை விட அழகு. ஒரு நடனமாடிக் காட்டு பார்ப்பம் என்றது.

காகத்திற்கு நல்ல புழுகம். உடனே காலைத் தூக்கி ஆடியது.

காலிலிருந்து வடை கீழே விழுந்தது. நரி எடுத்துக் கொண்டு போனது.



# இசை

செல்விசு. அஸ்வினி, அன்பகம்

நாம் எவ்வளவு
துன்பத்தில் இருந்தாலும்
அதையெல்லாம் சூரியனைக் கண்ட
பனிபோல்
மறக்க வைத்து மனதைச்
சந்தோஷமாக வைக்கும் சக்தி
இசைக்குண்டு

கண்களை மூடி ஓரிசையைக்
கேட்கும் போது
அதன் சுகமோ தனி
இசையை நேசி
அதன் சுகத்தை
உணர்வாய் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருட்டு இதயங்களுக்குச் சமர்ப்பணம்

அ.துன்னியா டயனிதா (ஆசிரியர்) கொழும்பு

திருமணப் பொருத்தம் பார்க்கச் சென்று வந்த
ஜாதகக் கொப்பி கண்ணில் பட
வயதின் மூப்பு நினைவில் வந்து
ஊஞ்சல் கட்டி விளையாடுகிறது
அவ்வப்போது சாத்திரமும் அழகுக்கு விலைபோகிறது

சாத்திரம் பேசுபவர்களின் நிஜத்தில் அது தினமும் மௌனவிரதம்.
அழகும் அந்தஸ்தும் இருந்தால் சாத்திரத்தையும்
மாற்றிவிடும் திறமை நம்மவர்களுக்கு ஏராளம்
கண்ணீரின் நிசப்தம் கலைந்து தெளிவதற்குள்
அடுத்த படலம்
பேதையவள் வாழ்வில் பெண்பார்க்கும்
படலங்களும் நிராகரிப்புகளும்...
வயது மூப்படைய மனம் மறுத்ததை அறியாது
உடலுக்கு திருமணப் பொருத்தம் எதற்கு!

மின்னல் தா(க்)ங்கும் வானம்போலே!
பல வரன்கள் வந்து போன பின்பும்
வாழ்வு வெற்றிடமாய் வெளிறிக்கிடக்க
வரன் பார்க்கும் படலம் மட்டும் ஓயவில்லை.

மௌனித்துப் போன சொந்தங்களின் திருமண விசாரணைக்கு
பதிலளிக்க எந்த பட்டப் படிப்புக்கும் தகுதியில்லை

பெண் பார்க்கக் கூடாத ஆடிமாசத்திலும்
விடாப்பிடியாக பார்க்கும் சாத்திரப் பிழைகளில்
ஜாதகக் குற்றச்சாட்டுகளுக்கு பஞ்சமிருப்பதில்லை.

அன்று அயோத்தி அரசசபை
திருமணப் பொருத்தம் பார்க்க மறந்தமை
சாத்திரத்திற்கு சம்பிரதாயம் புகட்டும்,
இராமன் சரித்திரம் படைத்ததை அறியா அறிவிலிகள்

அடிமாட்டு விலையில் ஏலம் போகும் பொருளை விடவும்
பெண்ணின் மனம் விலை போகவில்லை.

உயிரற்ற உடமைகளைவிட பெண்ணின் மனதை
தாரமாக நினையாத குருட்டு இதயங்களுக்கு சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால் கொண்டெழும் சக்தி !

மைதிலி தயாபரன், வவுனியா

## சிந்திக்க வேண்டியதன் அவசியம்

உலகில் வாழுகின்ற மனித உயிர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. சுமார் நூறு வருடங்களுக்கு முன், உலக சனத்தொகை சுமார் ஒரு பில்லியனாக (100 கோடி) இருந்தது. 2013 இல் அது 7 பில்லியனாக (700 கோடியாக) உயர்ந்து, தற்போது 7.9 பில்லியனை (790 கோடியை) நெருங்கிக் கொண்டிருப்பது நாம் அறிந்ததே.

ஆனால் புவியிலே வளங்களின் பரம்பல் குறிப்பிட்ட அளவிலே காணப்பட்டு சமநிலையிற் பேணப்படுவது இயற்கையான செயற்பாடுகளால் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவ்வளங்கள் கிட்டத்தட்ட தற்போது இருக்கும் சனத்தொகையில் ஐந்திலொரு பங்கினருக்கு மட்டுமே சௌகரியமாக வாழ்வதற்குப் போதுமானதாக இருப்பதாக தரவுகள் இயம்புகின்றன. இருப்பினும் வளங்களின் அளிப்பைக் கருத்திற் கொள்ளாமல் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் மீறி சனத்தொகை உயர்வடைந்து கொண்டு செல்கின்றது.

புவியில் வாழும் அனைத்து உயிரினங்களின் குடித்தொகையும் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கிலேயே அமையும் என்று விஞ்ஞானம் சொல்கின்றது. ஓர் இனத்தின் குடித்தொகை உயர்வடைந்து செல்லும்போது, அந்தச் சூழலுக்கு இசைவாக்கமும் இயைபாக்கமும் அடைவதற்குக் குறிப்பிட்ட காலம் செல்வதால் ஆரம்பத்தில் மிகக்குறைவே அதிகரிக்கும் எனவும், அதற்குப் பிறகு காட்டும் வேகமான வளர்ச்சி பின்பு குறைவடையும் என்றும் விளக்குகின்றது.


அதிகரித்த குடித்தொகைக்குத் தேவையான உணவு மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் போட்டிகள் காரணமாக அவர்களின் குடித்தொகை வளர்ச்சி பாதிக்கப்படும் எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதையே சாள்ஸ் டாவின் அவர்கள் தக்கன பிழைத்தலும் தகாதன அழிதலும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு இயற்கைத் தேர்வுக்கு உட்பட்ட உயிரினங்கள் பின்பு, நிலையான வளர்ச்சியைக் காட்டும் என்றும் சூழலில் ஏனைய உயிர்களுடன் தங்கியிருக்கும் என்றும் சொல்லப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மனித இனத்தின் வளர்ச்சி என்பது அவ்வாறான ஒரு வரையைக் காட்டுவதில்லை. அது தொடங்கிய காலத்தில் இருந்தே அதிவேகமான வளர்ச்சியைக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஏனைய உயிரினங்களைப் போல் அல்லாது எத்தகைய சூழலையும் தனக்குரியதாக்கும் மனிதனின் ஆற்றலும் இதற்குக் காரணமாக அமைகின்றது. அதைவிடவும் மனிதனின் அடிப்படைத் தேவைகள் என்பன உணவு, உடை, உறையுள் என்பனவற்றுடன் கல்வி, போக்குவரத்து, தொடர்பாடல் என்பவற்றுடன் நின்றுவிடாது அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இவ்வாறு தேவைகளை அதிகரித்தவாறு ஒவ்வொரு துறையிலும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தும் வளங்களைப் பங்கிட்டும் அனைவரும் வாழக்கூடிய சுற்றாடலை அவர்கள் ஏற்படுத்தி விடுகின்றார்கள்.

இன்னொரு புறம் மனிதன் வாழக்கூடிய புதிய உலகினைக் கண்டுபிடிக்கவும் உயிர்வாழ்வதற்குத் தேவையான ஒட்சிசன் மற்றும் நீர் முதலானவற்றை உருவாக்குவதற்கும் விஞ்ஞானிகள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.



இருப்பினும் மனிதர்கள் உயிர்வாழ்வதற்கு மிகவும் உகந்ததான இடம் இப்பூவுலகமே என்பது அவர்களுடைய கண்டுபிடிப்புக்களில் இருந்து தெளிவாகின்றது. இதனால் இந்தப் பூமியில் அனைவரும் வாழக்கூடியதான சூழலை அமைப்பதில் அவர்களின் கவனம் முற்றுமுழுவதாகச் செல்கின்றது. எனவே அந்த இடத்தின் வளங்களையும் சக்தி முதல்களையும் உச்ச பயன்பாட்டைப் பெறும் வகையிற் பயன்படுத்தி மக்களின் நல்வாழ்வுக் காகச் செயற்படுவதே அனைவரின் தேடலாக தற்போது இருக்கின்றது.

உலகின் சக்தித்தேவை என்பது தனியாக மின்சாரத்தை மட்டும் சுட்டுவதில்லை. வாகனங்களை இயக்குவதற்குத் தேவையான எரிபொருட்கள் கைத்தொழிற்சாலைகளை நடத்துவதற்குத் தேவையான மற்றும் மக்கள் தம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் அனைத்து சக்தி வடிவங்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. இவ்வாறாக மொத்த சக்தித் தேவையின் 80 சதவீதமான அளவை புதைபடிவ எரிபொருட்கள் (நிலக்கரி மற்றும் கனிய எண்ணெய்) பிடித்துக் கொள்கின்றது. மிகுதியை கருச்சக்தி, உயிர்ச்சக்தி, நீர் மற்றும் மீள்புத்தாக்க சக்தி முதல்களாகிய சூரிய சக்தி மற்றும் காற்றுச் சக்தி என்பன கொண்டுள்ளன.,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தித் தேவை அதிகரிப்பு என்பது மட்டுமல்ல அதிகளவில் நாம் புதைபடிவ எரிபொருட்கள் (நிலக்கரி மற்றும் கனிய எண்ணெய்) தங்கியிருப்பது என்பது ஆரோக்கியமற்றதாகும். உலகில் கனிய எண்ணெயின் பரம்பல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதால் அதற்கு மாற்றீட்டாக மீள்புத்தாக்க சக்தி முதல்களை அறிமுகப்படுத்துவது அவசியமாகும் என்பதை இன்று அனைவரும் உணர்ந்திருக்கின்றார்கள். அதனால் காற்றாலைகளைப் பயன்படுத்தியும் சூரிய சக்தியைப் பயன்படுத்தியும் மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்கும் வாகனங்களை ஓட்டுவதற்கும் அதிக கவனம் செலுத்தப் படுகின்றது. அதுவும் எமது நாட்டைப் பொறுத்தவரையில் சூரியப்படல்கள் மூலம் சக்தியைப் பெறுவதற்கும் காற்றாலைகளை நிர்மாணித்துப் பயன்பெறுவதற்கும் மிகவும் உகந்த இடமாக இப்பகுதி தெரிவு செய்யப் பட்டிருக்கிறது.

மீள்புத்தாக்க சக்தி முதல்களாகிய காற்றாலை மற்றும் சூரிய சக்தி முதல்களைப் பாவிக்கும்போது சூழலுக்குப் பாதிப்பில்லாத சுற்றாடல் நேய முறைகளைப் பின்பற்றுவதற்கு முடியும். புதைபடிவ எரிபொருட்களைப் பாவிக்கும்போது காபனீரொட்சைட்டும் காபனோரொட்சைட்டும் வளிமண்ட லத்தில் இருக்கும் காபனீரொட்சைட்டின் அளவை அதிகரிப்பதன் மூலம் உருவாகும் வளி மாசடைதல் மற்றும் அவற்றோடு தொடர்புடைய நோய்களை இல்லாதொழிக்கின்றது. தூய்மையான ஆரோக்கியமான பசுமையான சுற்றாடலை எமக்கு வழங்கின்றது. இதனால் சுற்றாடல் பற்றிய எண்ணக்கருவைக் கொண்டதாக சக்தி முதல்கள் என்னும்போது மீள்புத்தாக்க சக்தி நுகர்வு என்பது அவசியமாகப் பேணப்பட்டு அதை தனிப்பட்டவர்களிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கும் எமது நாட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாரிய முதலீடுகளைச் செய்வதைப் போன்று அல்லாமல் சிறிய முதலீடுகள் மூலமும் இவற்றைச் செய்து கொள்ளவும் முடியும். குறிப்பாக, பாவிப்பாரற்றுக் கிடக்கும் வீட்டுக் கூரையின் மீது சூரியப்படல்களைப் பரப்பி சூரிய சக்தி மூலம் மின்சக்தியைப் பிறப்பித்துத் தங்களின் வீட்டுத் தேவைக்குப் பாவித்தது போக மேலதிகமாக வரும் சக்தியைத் தேசிய மின் வலைப்பின்னலுக்கு வழங்கும் திட்டமும் எமது நாட்டில் நடைமுறையில் இருக்கின்றது. இதற்கான ஆரம்ப முதலீட்டை இலகுவான வட்டி வீதத்திற்கு வங்கிகள் வழங்குவதால் தேசிய மின் உற்பத்தியில் பங்குதாரர்களாக நாமும் இணைந்து கொள்வதற்கு முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் மற்றும் பெண்களின் பொறுப்பு

வினோதினி பாலசுப்பிரமணியம்

சர்வதேச பெண்கள் தினத்தை ஐக்கிய நாடுகள் மன்றம் 1975ஆம் ஆண்டுதான் சர்வதேசத்திற்குரிய நாளாக அங்கீகரித்தது. ஆனால் ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இந்த நாள் பெண்களுக்கு முக்கிய நாளாக உலகின் பல பகுதிகளில் இருந்து வருகிறது.

வேலை நேரத்தை குறைக்கவும், கூலியை உயர்த்தவும் வலியுறுத்தி, வாக்களிக்கும் உரிமை கோரி 15,000 உழைக்கும் பெண்கள் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 1908ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் தேதி ஒரு பேரணியை நடத்தினர். இதனையடுத்து அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சி அடுத்த ஆண்டு இந்த நாளை தேசிய பெண்கள் தினமாக அறிவித்தது.

இந்த நாளினை சர்வதேச தினமாக அனுசரிக்கவேண்டும் என்ற யோசனையை 1910 ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் நடந்த உழைக்கும் பெண்களின் சர்வதேச மாநாட்டில் கிளாரா ஜெட்கின் என்ற பெண்மணி முன்வைத்தார். அந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து 1911 ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரியா, டென்மார்க், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதை அடிப்டையாகக் கொண்டே 2011 ஆம் ஆண்டு நூறாவது சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. எனவே, அந்த வகையில் இந்த வருடம் 111 ஆவது பெண்கள் தினம் கொண்டாடப்படுகின்றது.

கிளாரா ஜெட்கின் ஒரு சர்வதேசப் பெண்கள் தினம் வேண்டும் என்ற யோசனையை முன்மொழிந்தபோது எந்த நாளில் அதைக் கொண்டாட வேண்டும் என்று குறிப்பிட்டு அதற்கான திகதி எதனையும் கூறவில்லை. முதலாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்தபோது, 1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் போர் வேண்டாம், "அமைதியும் ரொட்டியும்" தான் தேவை என்று வலியுறுத்தி மார்ச் 8 ஆம் தேதி (ஜூலியன் நாட்காட்டியின் படி பெப்ரவரி 23 ஆம் திகதி) பெண்கள் தமது போராட்டத்தைத் தொடங்கினர்.

நான்கு நாள்கள் தொடர்ந்த இந்தப் போராட்டம், சர்வதேச மகளிர் தினம் என்ற கருத்துக்கு உறுதியான ஒரு வடிவத்தைக் கொடுத்தது. நீண்டதொரு போராட்டமாகக் கருதப்பட்ட இந்தப் போராட்டம் கடைசியில் ரஷ்ய முடி மன்னரான ஜார் அரியணையை விட்டிறங்குவதற்கான அழுத்தத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தது. இதனையடுத்து முடியாட்சியும் முடிவுக்கு வந்தது. முடியாட்சிக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட தற்காலிக அரசாங்கம் பெண்களுக்கு வாக்குரிமையை அளித்தது.

இந்த மாற்றம்தான், 1917ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற புகழ்பெற்ற ரஷ்ய புரட்சிக்கும், அதன் விளைவாக உலகெங்கும் சோஷலிஸ்ட் அரசுகள் தோன்றுவதற்கும் முன்னோட்டமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகில் இணையம் பயன்படுத்தும் பெரும்பாலானவர்களின் வாட்ஸ்அப் மற்றும் ஃபேஸ்புக் ஸ்டேட்டஸ்களை மகளிர் தினம் தொடர்பான வாழ்த்துச் செய்திகள், கருத்துக்கள் மற்றும் இவை தொடர்பான வீடியோ காட்சிகள் அலங்கரிப்பதைக் காண முடிகின்றது. இவ்வாறு மகளிர் போற்றப்படுகின்ற சூழலிலேதான் பெண்களின் உலகம் மிகுந்த சவாலானதாக இருந்து வருகிறது. என்ன தான் ஆண்களுக்கு நிகராக பெண்கள் பல துறைகளில் வானுயர சாதித்தாலும், இந்த மனித நாகரிகமும் அறிவியல் தொழில் நுட்பமும் வளர்ச்சியடைந்துள்ளதாகக் கூறப்படுகின்ற 21ஆம் நூற்றாண்டிலும்கூட பெண்ணடிமைத்தனம் என்பது வீடுகளிலும் அலுவலகம் உள்ளிட்ட பல வெளியிடங்களிலும் தொடர்ந்து கொண்டிருப்பது வருத்தத்திற்குரியதே.

இன்னுமே எமது சமூகத்தில் உள்ள பல பெண்கள் குடும்ப வன்முறை, பாலியல் தொந்தரவு , வேலையிடத்தில் பெண் என்ற காரணத்தால் போதிய சம்பளம் வழங்காமை என உடலாலும் உளவியல் ரீதியாகவும் வன்முறைக்கு ஆளாகின்றனர். மகளிர் தினத்தில் பல வாழ்த்துப் பதிவுகளை இடுகின்ற நாம் தான் நமது சமூகத்தில் பெண்கள் வன்முறைக்குள்ளாக காரணமாகவும் இருக்கிறோம். இது எவராலும் மறுக்க முடியாத அழுத்தமான உண்மை.

ஒரு பெண் சமுகத்தில் ஆளுமையுடன் முன்னேறி வருகிறாள் என்றால் அவளின் ஆளுமையுடன் மற்றவர்கள் போட்டி போட்டு முன்னேற வேண்டும். ஆனால் எமது சமூகம் அவ்வாறு செய்வதில்லை. அவளது நடத்தை, அவளது அந்தரங்க வாழ்வு இவற்றைத்தான் அவளுக்கெதிரான ஆயுதமாக பயன்படுத்துகிறது.

ஆரம்பத்தில் இருந்தே பெண்களை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என பல்வேறு மாயைகளுக்குள்ளேயே, எமது சமூகம் வாழ பழக்கப்படுத்தி இருக்கின்றது. இதனால் அவர்களால் இந்த நடத்தை ரீதியான விமர்சனங்களையும் தாக்குதல்களையம் எதிர்கொள்ள முடியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்டு, ஒதுங்கி விடுகின்றனர். ஒருவருக்கு நடக்கும் இவ்வாறான விடயங்கள் அடுத்த பெண்கள் முன்னே வருவதற்கும் முன்னேறுவதற்கும் பெரும் தடையாக அமைகின்றன..

பல ஆண்டுகளாக அடுப்படியில் அடங்கிக் கிடந்து, பின்னர் எழுச்சி பெற்று வெளியே வந்துள்ள நம் பெண்களை இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் மீண்டும் அடுப்படியில் முடக்கிவிடக் கூடாது. முதலில் நாம் பெண்களை சமூகத்தின் பல்வேறு நிலைகளிலும் சரிசமமாக மதிக்க வேண்டும். அவர்களின் திறமைகளை பாராட்டி வளர்க்க வேண்டும். அதே வேளையில் பெண்களும் இவ்வாறான் செயற்பாடுகளுக்கு அஞ்சி அடிபணியாமல் துணிந்து ஆற்றலோடு முன்னேறுவதற்கு முன் வர வேண்டும். இதுவே இன்றைய காலத்தின் தேவையாகும்.

---

## பெண்ணில் பெருந்தக்க யாதுள

சி. வரதராஜன், வவுனியா

பெண்மை என்பது பேதமை அல்ல
பெண்மை என்பது சாதனை
பேடு என்றால் கேடு அல்ல
பேடு என்றால் பீடு
பெண்ணிற்கு நிகர் ஏதுள
அன்பென்றால் பெண்
அறிவென்றால் பெண்
உழைப்பென்றால் பெண்
சகிப்பென்றால் பெண்
நெருப்பென்றால் பெண்
நிகரற்ற பெண்கள்
நாட்டின் கண்கள்
தந்தையால் கூட
ஆட் கொள்ள முடியா
வாலிப முறுக்குப் பிள்ளையை
அன்பால் கட்டி அல்வழி நீக்கி
நல்வழி காட்டுவாள் பெண்
கணவன் ஊதாரியாகவோ
உதவாக்கரையாகவோ
உருப்படாதிருந்தால் அவனை
உருப்படியாக்கி வாழ்பவள் பெண்

உறவுகள் பிரிந்து உதிரிகளாகச்
சிதறிப் போகாமல்
சீராய் இணைத்து குற்றம்
காணாமல் சுற்றத்தோடு
வாழ்பவள் பெண்.
கணவனைப் பேணல்
பிள்ளைகள் பெறல்
மனையினைப் பெருக்குதலோடு
பெண் வேலைக்குப் போகத்
தொடங்கிய போது
மேலும் பெருந்தகை யானாள்
கணவனுக்கு நிகராய்
ஊதியம் சேர்த்தல்
அதிகாலை விழித்து
முன்னிரவு வரை ஓய்வின்றி
ஓடி ஓடி உழைத்தல்
மனையில் ஏதும் குறைகள் நேராது
மாண்புறக் காத்தல் இவ்வாறு
இரட்டை சேவை செய்யும் உன்னத
பெண்மை போற்றுதற்குரிய
தாய்மையின் தன்மையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதன்னையின் பாடல்

அகரா, வவுனியா

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 120ஆவது வெளியீடும் கவிஞர் கிருஷ்ணப்பிரியன் அவர்களின் இரண்டாவது நூலுமாகிய மூதன்னையின் பாடல் எனும் நூலை முழுமையாகப் படித்து முடித்த போது எனக்கு மனதிலே முதலில் தோன்றிய விடயம் இவர் இன்றைய பல கவிஞர்கள் சொல்லத் தயங்குகின்ற சொற்களை எல்லாம் சொல்லக்கூடிய துணிவுடைய கவிஞர் என்பதாகும். அதை அவர் என்னுரையிலே கூட என்னுடைய கவிதைகள் அரசியல் பேசுவனதான் நான் நடுநிலைமை எனும் வேடம் தரிப்பதில்லை என்று பதிவுசெய்திருக்கிறார்.

எனவே புதுக்கவிதைகள் எனும் வகைக்குள் அடங்கும் இவரது கவிதைகளில் உள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் உயிர் கொடுத்து உடலை அமைத்து இச்சமூகத்திற்குள் உலாவவிட்டிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் மற்றவர்களது வலியை உணர்ந்து எழுதுபவன் மட்டும் கவிஞனாகிவிட முடியாது. தன்னுடைய வலியை தாங்கிக்கொண்டு தன்னுடைய கண்ணீரைத் துடைத்துவிட்டு மற்றவர்களுடைய வலிகளுக்கெல்லாம் ஆறுதல்களையும் வழிகளையும் சொல்பவனே முழுமையான கவிஞனாகிறான். அவ்வாறாக இவருடைய கவிதைகளும் தன்னுடைய வலியை மட்டுமன்றி குழந்தைகள், முதியவர்கள், தாய் தந்தை என்று சமூகம் சார்ந்தும் எங்களுடைய நாடு மட்டுமன்றி உலகளாவிய நாட்டுப் பிரச்சினைகளையும் பேசி நிற்பதால் இவர் ஒரு முழுமையான கவிஞனாக தெரிகிறார்.

மரத்துப்போன மனித மனம் மாறி வருகின்ற இன்றைய சூழ்நிலையிலே எங்களுடைய கவிஞர் சரியான கேள்வி ஒன்றை முன்வைத்து "எப்படிக் கடந்து செல்ல முடிகிறது?" என கவிதையை ஆக்கியிருப்பது எங்களை அங்கேயே நிற்கவைத்து உனக்குள் இருக்கும் மனிதம் எங்கே? மனிதத்தன்மை எங்கே? என்று எங்களுக்குள்ளே எங்களை ஆராய வைக்கிறது. மூச்சு உள்ளவரைதான் மனிதனுக்கு வாழ்க்கை. அந்த வாழ்க்கையை அவன் சுயமரியாதையோடு வாழவேண்டும். அவ்வாறு சுயமரியாதையோடு வாழ்வதற்கான விழிப்புணர்வை இவருடைய பல கவிதைகள் ஏற்படுத்தியிருக்கின்றன. உதாரணமாகப் பார்த்தால் கீழ்நிலையிலே வாழும் எந்தவொரு மனித சமுதாயமும் கல்வி ஒன்றின் மூலமே மேலெழ முடியும் என்பதைச் சொல்லும் ஒரு கவிதை குட்டக் குட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனிகின்ற கூட்டத்திலேயிருந்து "சிறுமியொருத்தி சுமக்கமுடியாத புத்தகப்பையை சுமந்தபடி ஒடிசலான மலைப்பாதையில் தன் பள்ளியை நோக்கி செல்கிறாள்." என்று அந்த சமுதாயத்திற்கான கல்வியின் அவசியத்தை உணர்த்துகின்றது. அத்தோடு உழைத்துப் பின் உரமாகிப் போகும் மலையக சமுதாயத்தை பல வருடங்களாக தூரத்திலே இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் என்னைப்போன்றவர்களை அவர்களுடைய வாழ்வியல் அனுபவத்திற்குள்ளே இழுத்துச்செல்லும் சில கவிதைகளும் இருக்கின்றன.




"இருநூறு ஆண்டுக்குப் பின்னும்
இருட்டுக்குள் ஒரு தேசம்
இலங்கையின் மத்தியிலே
இருக்கிறது அத்தேசம்"

இப்படித்தொடங்கும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல் வரியான "தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா" எனும் தலைப்பைக கொண்டுள்ள கவிதை வரலாறு, அரசியல் மட்டுமன்றி மலையக மக்களின் ஆதங்கங்களையும் வெளிக்காட்டி நிற்கிறது.

தொடர்ந்து "வாழ்தல்" எனும் நான்கு வரிக் கவிதை ஒன்று இருக்கிறது. நீ வாழ்ந்துகொண்டிருக்கிறாய் என்றால் முயற்சியோடு உன்னை எங்கோ ஒரு திசையில் பயணப்படுத்திக் கொண்டிருக்கிறாய், இல்லையென்றால் நீ முடங்கிப்போகிறாய். வாழ்க்கையை நொந்து வாழ்வை சபித்து கடக்க முடியாது நிலைத்துத் தேங்கிய குட்டையைப்போல் ஆகிறாய் என்று சொல்லி எம்மைத் தட்டி எழுப்பிவிடுவதாக அமைந்திருக்கிறது அந்தக் கவிதை.

ஏதோவொரு கனவின்றி தேடலின்றி எந்த மனிதனாலும் வாழும் காலத்தை கடக்க முடியாது. அக்கனவை நாம் அடைதல் என்பது நம் முயற்சியைப் பொறுத்தே அமையும். சில கனவுகள் அடையும் தூரத்தில் இருக்கும். சில அடையப்படாமல் எட்டாத தூரத்தில் இருந்து நம்மை அலைக்கழிக்கும். சாதாரண மனிதன் அந்தக் கனவை அடையாதவிடத்து அதைக் கடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமுடியும். ஆனால் நம் கவிஞருக்கு அப்படியல்ல. அவர் துரத்திய கனவு அடையப்படாமல் அக்கனவுகளின் வெளிச்சம் அவர் சமூகத்தில் ஒளிரப்படாமல் ஒரு கொடுங்கனவாக மாறி அவரைத் துரத்திக் கொண்டிருப்பதாக அவரது கவிதைகளினூடாக நான் அறிகிறேன். அக்கனவை காலம் அவருக்கு நனவாக்கட்டும் என்று வேண்டிக்கொண்டே மேலும் பக்கங்களைப் புரட்டினேன்.

இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய வசனநடைசார்ந்த பல கவிதைகள் இருக்கின்றன. வாசிக்கும்போதே பல சம்பவங்களை நினைவுபடுத்தி அவற்றினூடே பயணிக்கவைக்கிறது. அமெரிக்க நாட்டு வெள்ளையர் கருப்பினத்தவருக்கிடையில் இடம்பெற்ற பிரச்சினையை "I can't breath" எனும் கவிதையில் கொண்டுவந்திருக்கிறார். மேலும் மார்டின் லூதர்கிங்கை மீண்டும் ஒரு தடவை தேட வைத்தார். 99 வருடங்களின் முன் நடந்த ஜோர்ஜ் கொலையும் அதுசார்ந்த கிளர்ச்சியையும் தேட வைத்தார். மஹ்மூத் தர்வீஷை தேடவைத்தார். விக்ரர் ஷாராவை தேடவைத்தார். ஸ்பாட்டகஸை, புரோமத்தியஸ்தை தேடவைத்தார். இப்படித் தன் வாசிப்பையும் அறிவையும் தேடலையும் கவிதைகளாக்கி வாசகர்களுக்கு பல தேடல்களை விட்டுச் சென்றுள்ளார் ஆசிரியர்.

இப்படி அரசியல் பேசும் இவரது கவிதைத் தொகுப்பில் தனிமனித உணர்வுசார் கவிதைகளும் இடம்பிடித்துள்ளன. காதல், அன்பு, கோபம், வெறுப்பு, நினைவு, தனிமை, காத்திருப்பு என்றெல்லாம் அவை பரந்து செல்கின்றன. உலகெங்கும் போரும் அதன் வடுக்களும் கொட்டிக்கிடக்கும் இன்றைய காலகட்டத்தில் அன்பும் காதலும் எத்தகைய அருமருந்து! எத்தகைய அழகென்று பாருங்கள்.

"எங்கு தொடங்கி எங்கு முடிப்பது எனத் தெரியாத கவிதையைப் போல
எங்கு தொடங்கி
எங்கு முடியும் எனத்தெரியாத
ஒரு நீருற்றைப் போல
அன்பின் தருணங்கள் அழகானவை".

இவ்வாறு எல்லாவற்றையும் தொட்டுச்சென்ற கவிஞர் இயற்கையையும் விட்டு வைக்கவில்லை.

இயற்கையோடு வாழ்வது கவிதை மனம், இயற்கையாக வாழ்வது கவிதை மனம். அதுபோல கிருஷ்ணப்பிரியன் அவர்களது மனமும் எனக்குரிய மழைத்துளியையும் நீயே எடுத்துக்கொள் என்று இயற்கையைக் காதலிக்கிறது. இது இறக்கும் தறுவாயில் உள்ள காதலியின் ஆயுள் நிலைக்க என் ஆயுளையும் எடுத்துக் கொண்டு அவளை வாழ விடு என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சுவது போலிருக்கிறது. அவ்வரிகள் தொடர்ந்தும் எனக்கு தேவைப்படுவதெல்லாம் உன் நிழல், பூக்கள், கனிகள் என்று கேட்பதுகூட காதலன் காதலியிடம் உன்னிடத்தில் எனக்கு வேண்டிய தெல்லாம் உன் தேறல், மலர்ச்சி, சிரிப்பு என்று கேட்பது போல்தான் தோன்றியது.

மேலும் கிருஷ்ணப்பிரியனின் முதலாவது நூலான வேரின் பிரசவங்கள் எனும் நூலிலிருந்து இந்நூல் வசன அமைப்புக்களிலும் கவிதை நயத்திலும் முழுமை பெற்று வெளிவந்திருக்கிறது. அத்தோடு இவ்விரண்டு நூலிலுமே "ஐயா" என்ற தலைப்பிலே கவிதைகள் இருக்கின்றன. முதல் நூலில் தான் சிறையிலே இருந்தபோது தன்னை தந்தை பார்க்க வந்த நினைவுகளையும் மௌனத்தின் நீட்சியையும் கண்ணீரின் வீரியத்தையும் சொல்கிறார். இரண்டாவது நூலிலே இறந்துபோன தன் தந்தை இன்னும் கொஞ்சக் காலம் வாழ்ந்திருக்கலாம் என்று தன்னுடைய ஏக்கத்தைப் பதிவு செய்துள்ளார்.

ஆக இவருடைய பெரும்பாலான கவிதைகள் மனதில் ஏதோவொரு விதத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றன.

---

## வாசகர் கருத்து

பசுமை இதழ் -6 இல் வெளியான பொ (ப)ன்னாடையும் க(ல் )லா நிதியும் வாசித்த போது மஹாகவியின் குறும்பா ஒன்று ஞாபகத்தில் வந்தது.

'காசு கொடுத்து பட்டம் வாங்குற மாதிரி -
தாகூர் நூற்றாண்டு விழா ஆச்சு
தமிழ் நடிகர்க் கிது வாய்ப்பாய் போச்சு
நோகாது தந்தாராம்
நூறாயிரம், " நடிப்புக்கு
ஆகா இவர் ! " என்றூர்ப் பேச்சு

ஆ.மகேஸ்வரன், 84, யாழ் வீதி, வவுனியா

---

தங்களின் சஞ்சிகை கிடைத்தது.
மிக்க மகிழ்ச்சி. சுருக்கமாகவும் தேவையான விடயங்களை உள்ளடக்கி அதற்கேற்ற புகைப்பட தெரிவுகளுடன் சிறப்பாக இருக்கிறது.
குறைந்த விலைக்கு பெறுமதியான செய்திகள். ஆசிரியருக்கும் குழுவினருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துகளும் பாராட்டுக்களும்.
அன்புடன் பிரியவாசகி
ந. தாமரைச் செல்வி, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஊடகத்துறையின் நிகரற்ற ஆளுமை

# ம.வ. கானமயில்நாதன்

- பி.மாணிக்கவாசகம்

யாழ்ப்பாணத்தில் ஊடக அச்சுறுத்தலுக்கு மத்தியில் பணியாற்றிய உதயன் நாளிதழின் ஆசிரியர் கானமயில்நாதன் தனது 79 ஆவது வயதில் 22.11.2021 ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

தொடக்கத்தில் வீரகேசரியில் தனது பத்திரிகைப் பணியைத் தொடங்கியவர் தினபதி பத்திரிகையில் பணியாற்றிய பின்னர் யாழ்ப்பாணத்தில் தமிழில் பத்திரிகை ஒன்றைத் தொடங்க வேண்டும் என்ற தேவை எழுந்தபோது அவரது தலைமையில் 27.11.1985 ஆம் திகதி உதயன் நாளிதழ் பிரசவமானது.

அக்டோபர் 1995 இல் இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றத் தாக்குதலைத் தொடங்கியபோது யாழ்ப்பாண அலுவலகத்திலிருந்து அச்சு சாதனப் பொருட்களுடன் சரசாலைக்கு இடம்பெயர்ந்து சென்று தொடர்ந்து உதயன் நாளிதழை கானமயில்நாதன் நடத்தினார்.



இலங்கை அரசு 2000 ஆம் ஆண்டு மே மாதம் அவசர நிலையை பிரகடனப்படுத்தி, யாழ்ப்பாணம்-கண்டி ஏ-9 நெடுஞ்சாலையை மூடியபோது யாழ்ப்பாணத்தில் காகிதம் அச்சிடும் மை தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில் 02.05.2006 அன்று உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுதாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உதயனின் பணியாளர்கள் இருவர் உயிரிழந்து, அலுவலகம் சேதமாக்கப் பட்ட போதும் உதயன் நாளிதழைத் தினந்தோறும் கொண்டு வந்ததில் ஆசிரியர் ம.வ. கானமயில்நாதனின் பங்கு அளப்பரியது.

அச்சுறுத்தல்கள் மிக மோசமான நெருக்கடிகளுக்கு மத்தியில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட உதயன் பத்திரிகைக்கு பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு ஆண்டுதோறும் வழங்கும் ஊடக சுதந்திரத்துக்கான விருதை 17.11.2013 அன்று வழங்கியது. இந்த விருதை ம.வ.கானம்யில்நாதனும், உதயன் நாளிதழில் நிறுவனர் ஈ.சரவணபவனும் கூட்டாக இணைந்து பெற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை பத்திரிகையாளர்கள் வரலாற்றில் உள்நாட்டுப் போர் சூழலில் தொடர்ந்து அச்சமின்றிப் பணியாற்றித் தடம் பதித்தவர் கானமயில்நாதன். தொடர்ந்து உதயனின் ஆசிரியராக 36 ஆண்டுகள் பணியாற்றி, தனது ஊடகப்பணியில் அசைக்க முடியாத முத்திரையைப் பதித்து மறைந்துள்ளார்.

அவரது மறைவு தமிழ் ஊடகத்துறையில் ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பாகும். அவருக்குப் பசுமை தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## பெண்களைப் போற்றுதும்

சொந்தமாக தொலைக்காட்சி தயாரிப்பு நிறுவனத்தைத் துவங்கிய முதல் கறுப்பினப் பெண்மணி : ஒப்ரா வின்ஃப்ரே, பில்லினியரான முதல் கறுப்பினப் பெண்மணியும் இவரே (1986)

பிரிட்டனின் முதல் பெண் உள்துறை செயலர் : ஜாக்வி ஸ்மித் (2007 ஜூன்)

ஆசியாவின் முதல் பெண் இரயில் எஞ்சின் ஓட்டுனர் : சுரேகா யாதவ், இந்திய இரயில்வே

இஸ்ரேல் நாட்டின் முதல் பெண் பிரதமர் : கோல்டா மேயர் (1964)

பிலிப்பைன்ஸ் நாட்டின் முதல் பெண் பிரதமர்: கொரோஸான் அகினோ (1986)

கனடாவின் முதல் பெண் பிரதமர் : கிம் காம் பொல் (1993)

ஜெர்மனியின் முதல் பெண் சான்சிலர்: டாக்டர் ஏஞ்சலா மெர்கல் (2005)

பிரிட்டனின் முதல் பெண் பிரதமர் : மார்க் ரெட் தாட்சர் (1979)

சிலி நாட்டின் முதல் பெண் அதிபர்: மிச்செல் பாச்லெட் (2006)

ஒரு நாட்டின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் ஆப்பிரிக்கப் பெண்மணி : எல்லன் ஜான்சன் சர்லீஃப் லைபீரிய அதிபர் (2005)

பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய உலகின் முதல் நாடு : நியூசிலாந்து (1893)

விம்பிள்டன் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்ற முதல் கறுப்பினப் பெண்மணி : அல்தியா கிப்ஸன் (1957)

கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற முதல் பெண்மணி : மௌரீன் காதரின் (1953)

ஆங்கிலக்கால்வாயை நீந்திக் கடந்த முதல் ஆசியப் பெண்மணி : ஆரதி சா'ா. இந்தியா (1959)

விண்வெளி சென்ற முதல் கறுப்பினப் பெண்மணி : மா கரோல் ஜெமிசன். எண்டவர் (1992)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8

கவிஞர் மணிமன்றன், யாழ்ப்பாணம்

மகளிர்நாம் மகளிர்நாம் மகளிர்நாம் மண்ணில்
மாண்புக் களவுகோலாகும் மங்கள மங்கையர்நாம்
அகழ்தலால் சொல்லால் நெஞ்சைக் குடைதலால் அபலையை
அடக்கி ஆளலாமென எண்ணிய ஆணினம் பாழ்

நாட்டிற் கழகுநல்கும் நோயற்ற வாழ்வு விளைச்சல்
நிறைசெல்வம் மகிழ்ச்சி நாட்டரண் என்பவற்றின்
ஊட்டத்திற்குக் கண்ணீரை உரமாக்கி காவிரிபோல்
ஓய்வின்றி யோடியோடி உழைத்துயர்ந்த உத்தமிகள்நாம்

சிறைப்படுத்தி நம்மையெல்லாம் சித்திரவதைக் குளாக்கி
சிறுமையிலும் சிறியவராய் உலகிற்குக் காண்பித்து
முறைகேடாய் நடாத்தி முழுவுரிமையையும் பறிக்க
முற்பட்ட ஆடவரை மடக்கிய மறக்குயில்கள் நாம்

அதிகாரத்தைக் கையிலெடுத்ததன் அருமை புரிந்து
அடிமைத்தனத்தை அடியோடழித்தகம் மகிழ்ந்தனம்
எதிலும் எந்த வேளையிலும் ஏதிலார் தலையிட்டதனை
ஏற்றி வீழ்த்தாமல் பார்த்த ஏந்திழையார்நாம்

பெற்றதோடு மட்டும் நின்றனமில்லை பிள்ளையைத் தாய்ப்
பாசமுள்ள வனாக்கி பாடஞ்சொல்லிக் கொடுத்தும்
கற்றோர்முன் கர்ச்சிக்கும் கடுமானாக உரையாற்றும்
கலைஞனாக அரங்கேற்றியும் வைத்த காரிகைகள் நாம்

மனத்தின்கண் வளர்அன்பு முகத்தின்கண் வனப்பினை
மேலும் மலர்வித்து வாஞ்சையைப் பிரதிபலித்திடவே
அனவரதம் அண்டிவரும் விருந்தினர்க் கமுதளித்து
அறவொழுக்கத்தைப் பேணிய இல்லறத் தரசிகள்நாம்

போர்முரசம் முழங்கிட வேபுறப்பட்ட நம்மைப்
போர்க்களத்தில் கண்ணுற்றதும் கலைந்தனர் பகைவர்
ஆர்ப்பாட்டம் கலகத்தை அடக்கி அயலில் மீளவும்
அமைதி ஆனந்தம் அரும்பச்செய்த அணங்குகள்நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களும் உயர்பட்டங்களும் இன்றைய ஆட்சியிலே
சோதரிகள் நங்கைகளில் தேறுக ஆண்வர்க்கத்தினர்
திட்டங்கள் தீட்டியவற்றைச் செயலுரு வாக்குவதும்
தரணியிற் றலைமை தாங்குவதும் தையலார்நாமே

எக்காலத்திலும் ஆண்களின் தீயநெறிகளை நகல்
எடுக்கா தரியனசாதித்த நாகரிக நங்கைகள்நாம்
தக்கபொழுதில் உலகமேம் பாட்டிற்கும் வளர்ச்சிக்கும்உறு
துணையாக விருந்த மனோன்மணித் தேவதைகள்நாம்

நாள்தோறும் வளர்த்தெடுத்த வாக்குரிமை இயக்கம் மக்கள்
நீள்நினைவினிலே நிறைந்திருந்த நீதிநெறி இயக்கம்நல்
வாழ்க்கைக்கு முன்னின்று அடிக்கலிட்ட ஆன்மிக இயக்கம் எழு
வன்முறைக் குளாகாமல் தடுத்த வீரவனிதைகள் நாம்

## சாதனை மாந்தரைப் போற்றுவோம்

அமெரிக்காவில் மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணி : எலிசபெத் பிளாக் வெல் (1849)

முதல் கறுப்பின பெண் நீதிபதி : ஜேன் மடில்டா போலின், நியூயார்க் நகரம் (1939)

முதல் ஆசிய மிஸ் யூனிவர்ஸ் : புரூக் மகாலானி லீ, அமெரிக்கா, தாய்வான் பூர்வீகம் (1997)

அமெரிக்க தபால் தலையில் இடம் பெற்ற முதல் பெண்மணி : மகாராணி இஸபெல்லா, ஸ்பெயின் (1893)

அமெரிக்க காங்கிரசுக்கு தெரிவாகிய முதல் பெண்மணி : ஜானெட் ரான்கிங், மோன்டானா (1916)

அமெரிக்காவின் முதல் பெண் அயலுறவுச் செயலர் : மாடலின் ஆல்பிரைட் (1996)

அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகரான முதல் பெண்மணி: கோண்டலீஸா ரைஸ் (2001)

அமெரிக்காவின் முதல் 'முதல் பெண்மணி' : மார்த்தா வாஷிங்டன்

அமெரிக்காவின் முதல் கறுப்பினப் பெண்தூதர்: பாட்ரிக்கா ஆர்ஹாரிஸ், லக்சம் பார்க் (1965)

பக்கிங்காம் அரண்மனையில் குடிபுகுந்த முதல் ஆங்கில அரசு வாரிசு : விக்டோரியா மகாராணி (1837)

முதல் ஆசிய மிஸ் யூனிவர்ஸ் : புரூக் மகாலானி லீ, அமெரிக்கா, தாய்வான் பூர்வீகம் (1997)

துருக்கியின் முதல் பெண் பிரதமர் : தான்சு சில்லர் (1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைய சமுதாயமும் கணினி அறிவும்

- சி. கோபிநாத், வவுனியாப் பல்கலைக்கழகம்.

மாற்றம் ஒன்றே மாறாதது. இந்த நூற்றாண்டுக்கான மாற்றங்கள் எண்ணிலடங்கா திருப்பங்களுடன் மிக விரைவாக நடந்தேறி வருகின்றன. அச்சவால்களை எதிர்கொள்ளும் விதமாக மாணவ செல்வங்களை வழிநடத்தும் தார்மீக பொறுப்பு நாம் அனைவருக்கும் உரியது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தவழ்ந்து எழுந்த கணினி தொழினுட்பம் இருபத்தோராம் நூற்றாண்டில் வீறு கொண்டு, மனித வாழ்வின் அனைத்து துறைகளிலும் தன்னை ஓர் இன்றியமையாத அங்கமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. உலகமே ஒரு கைபேசியில் அடங்கும் விந்தையை மனித குலம் கணினி அறிவியலூடாகவே சாத்தியம் ஆக்கியது. இனி எத்துறையிலும் கணினி அறிவு சார்ந்தே நிகழ்கால, எதிர்கால வேலைவாய்ப்புகள் அமையப்போகின்றன.

எனவே, மாணவர்கள் எவ்வாறான பாடங்களை, பட்டப்படிப்புகளை பாடசாலையிலும், பல்கலைக்கழகங்களிலும் தெரிவு செய்வது, அதன் முக்கியதுவம் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கான அதன் அவசியம் என்ன என்பதை அறிந்திருப்பது மிக முக்கியமாகும்.

பாடசாலை மாணவர்கள் ஆகக்குறைந்தது தரம் 10 மற்றும் 11 வகுப்புகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் (Information Communication and Technology) பாடநெறியை தெரிவுசெய்வது சாலச்சிறந்தது. இப் பாடநெறி கணினி, தரவு தொடர்பாடல் (Communication), மென்பொருட்கள் (Software), செய்நிரலாக்கம் (Programming), இணையம் மற்றும் இதர அடிப்படைகள் தொடர்பான மிகசிறந்த விளக்கத்தை மாணவர்களுக்கு வழங்கும் விதத்தில் தொகுக்கப்படுள்ளது.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் பாடநெறியை ஆங்கில மொழியில் கற்றுக்கொள்வது மாணவர்களுக்கு எதிர்காலத்தில் உயர் கல்வியிலும், வேலைவாய்ப்புகளிலும் மிக உறுதுணையாக அமையும். தமிழ் மொழிமூல கற்றலில் ஈடுபடுகின்ற மாணவர்கள்கூட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் பாடநெறியை ஆங்கிலமொழியில் கற்றுக்கொள்ள கூடியவாறான வழிமுறைகள் பாடசாலைகளில் இருக்கவேண்டியது அவசியம்.

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் 17 அர்ச பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவை 244 கற்கை நெறிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு வழங்குகின்றன. எனினும் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி என்பது போட்டித்தன்மை வாய்ந்ததாகும்.

உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் 10-15வீத மாணவர்கள் மாத்திரமே பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்படுகிறார்கள். இவ்வாறான கடும் சவால்களைத் தாண்டி 3 அல்லது 4 வருட பட்டப்படிப்பை பூர்த்திசெய்து பட்டதாரிகளாக வெளியேறும் இளைஞர் யுவதிகள் தகுதியான வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொளும் அடுத்தகட்ட தடைதாண்டல் களத்தில் வெற்றி பெறவேண்டும். கலைத்துறை பட்டதாரிகளுக்கு இத் தடை தாண்டல் களம் மிகக்கடினமான சோதனைக் களமாகவே இன்றுவரை அமைகிறது.

ஒவ்வொரு வருடமும் வெளிவருகின்ற அதிக எண்ணிக்கையிலான கலைத்துறை பட்டதாரிகளுக்கு சமஅளவான துறைசார் வேலைவாப்புகள் இன்மை, இருக்கின்ற வேலைவாப்புகளுக்கு தேவையான தொழிற் தகைமை அவர்களிடம் போதியளவில் இல்லாமை இதற்கான காரணங்களாக அமைகின்றன.

அதேவேளை உலகமயமாக்கலும், இலங்கையில் துரிதமாக வளர்த்து வரும் தகவல் தொழினுட்ப தொழிற்துறைக்கான மனிதவள தேவையும், கணினிசார் கற்கை நெறிகளை மேற்கொண்ட பட்டதாரிகளுக்கு மிகக் குறுகிய காலத்தில் தனியார் மற்றும் அரச வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்ள ஏதுவான சூழலும் இருக்கத்தான் செய்கின்றது.

புதிதாக தோற்றம் பெற்றுள்ள இத் தொழிற்சந்தையின் வரப்பிரசாதங் களைப் பெற தமிழ் மாணவர் சமூகம் சிறப்பானதொரு திட்டமிடலுடன் பல்கலைக்கழக தெரிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரத் தகுதி பெற்ற மாணவர்கள் குறிப்பாக கலைப் பிரிவில் சித்தியெய்தியவர்கள் பல்கலைக்கழகங்களில் மீண்டும் கலைத்துறையை தெரிவுசெய்யாமல் மாற்றீடாக விஞ்ஞான மற்றும் கணினிசார் கற்கை நெறிகளை தெரிவுசெய்வது காலத்தின் தேவையாகும்.

கலைப்பிரிவு மாணவர்கள் எவ்வாறான கணினிசார் கற்கைநெறிகளை பல்கலைக்கழகங்களில் தெரிவு செய்யலாம் என்பதை சற்று நோக்குவோம்.

**கற்கைநெறி:**

1. தகவல் தொழில்நுட்பம் முகாமைத்துவம் (MIT) தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ,மாணவர் அனுமதித் தொகை 170.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் (Industrial Information Technology) ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், மாணவர் அனுமதித் தொகை 100.
3. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (Information Technology & Management), மொறட்டுவை பல்கலைக்கழகம், மாணவர் அனுமதித்தொகை 127
4. தகவல் முறைமைகள் (Information Systems), கொழும்பு பல்கலைக் கழகம் மாணவர் அனுமதித்தொகை 120.
5. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT), வவுனியாப் பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம் மாணவர் அனுமதித் தொகை 285

இதைப்போன்று பலதரப்பட்ட புதிய பட்டப்படிப்புகள் அரச பல்கலைக் கழகங்களில் இலவசமாக வழக்கப்படுகின்றன. இருப்பினும் அவற்றைப் பயன்படுத்தாமல் பெற்றோர்கள் பல லட்ச ரூபா பணத்தைச் செலவழித்து பிள்ளைகளை தனியார் கல்லூரிகளில் அனுமதிப்பது அண்மைக்காலமாக தமிழ்ச் சமூகத்தில் அதிகரித்து வருகிறது.

உயர்தரத்தில் சித்தியடையாவிட்டாலும் எப்படியாவது தனியார் கல்லூரிகளில் சேர்ந்துவிடலாம் என்ற சிந்தனையே தமிழ் மாணவர்கள் மத்தியில் சிறிது சிறிதாக மேலோங்கி வருகிறது. இதன் விளைவாக உயர்தர சித்திவீதமும், அரச பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சி காண்கிறது.

தமிழ் மாணவர் சமூகம் கையில் வெறும் பட்டங்களை வைத்துக்கொண்டு அரச வேலை வாய்ப்புக்காக ஆர்பாட்டங்களை நடத்துவதிலும், வருடக் கணக்கில் காத்துக்கிடப்பதிலும் பார்க்க, காலத்திற்குத் தகுந்தாற்போல் புதிய தொழில்நுட்ப கற்கை நெறிகளில் தேர்ச்சிபெற்று வேலைவாய்ப்புச் சந்தையிலும், சுயதொழில் முனைப்புகளிலும் சுயகெளரவத்துடன் பெருவளர்ச்சி காணவேண்டும்.

தமிழர்களை காக்கும் கடைசி ஆயுதமாக எம்மிடம் மிஞ்சி நிற்பது கல்வி மாத்திரமே அதை திறம்பட கையாள்வதிலேயே எமது இனத்தின் எழுச்சி தங்கியுள்ளது.

---

***பிச்சா பாத்திரம்***

எங்கள் பிச்சா பாத்திரங்கள்
நிறையவில்லை என்றால்
மீண்டும் செல்வோம்
இன்னொரு தேசம்

*மணிப்புரம் சிவா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி - 03

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இடமிருந்து வலம்

1) வடபகுதியில் உள்ள பெரிய குளம்
8) மகளிர்தினம் கொண்டாடப்படும் மாதம்
19) காட்டு மிருகம்
24)வயதில் மூத்தவரை இப்படியும் அழைப்பர்.
35)கோழியில் ஓர் இனம்

மேலிருந்து கீழ்

12) மனைவியை இழந்தவர்
15) பாலைவனக் கப்பல் என அழைக்கப்படுவது
11) இன்றைய மின்தடையினால் கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள்
16)சூரியன் உதிக்கும்நாடு
24) தமிழில் இராமாயணத்தை எழுதியவர்

உங்களின் விடைகளை புத்தகக் கூப்பனில் நிரப்பி தபால் மூலம் எதிர்வரும் 30.04.2022ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பெயர் முகவரியுடன் தொலைபேசி இலக்கத்தையும் அனுப்புதல் வேண்டும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

1ஆம் பரிசு - 500.00 ரூபாய்
2ஆம் பரிசு - 400.00 ரூபாய்
3ஆம் பரிசு - 300.00 ரூபாய்

---

## குறுக்கெழுத்துப் போட்டி 1இன் விடைகள்

இடமிருந்து வலம்
1 இந்தியா,
6 கொடு,
8 ராகம்,
15 வனம்,
31 வதந்தி,
38 தவிடு
43 அனுராதபுரம்,
21 சீனா (வ.இ)

மேலிருந்து கீழ்
1 இராவணன், 6 கொரோனா,
28 தங்கம்

சரியான விடை எழுதியவர்களிடமிருந்து குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று பரிசு பெறுபவர்கள்:

(1) ப. பானுஷா,
100/12A, சூசைபிள்ளையார் குளம், வவுனியா

(2) சு. சிரோமி,
காத்தார் சின்னக்குளம் வவுனியா.

(3) த. உஷாந்த்,
மந்துவில் கிழக்கு கொடிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகமும் மனிதநேயமும்

. நாகசோழன்

உலகத்தில் எல்லோரும், எல்லா விடயங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகவே இருக்கின்றன. தொடுகைமூலம் வீரியமான வைரஸ் பரவுமாக இருந்தால் உலகத்தில் யாருமே உயிருடன் இருக்கமாட்டார்கள். அந்தளவிற்கு உலகில் தொடர்புகள் மிக நெருக்கமாக இருக்கின்றன.

மற்றவர்கள் நல்லாயிருந்தால்தான் நாமும் நல்லாயிருக்கலாம். எமது நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயி நல்லாயிருந்தால்தான், ஏனைய உணவுப்பொருட்கள், உடுப்பு வகைகள், வீடு கட்டுதல் என பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வியாபாரம் நடக்கும்.

வியாபாரம், மனிதநேயமும் சமூக அக்கறையும் கொண்டதாக அமைந்தால் அது சிறப்பாக இருக்கும். ஆனால் பலரும் குறித்த ஒரு வியாபாரத்திலேயே கொள்ளையாக சம்பாதிக்க முற்படுகிறார்கள்.

கொறோனாவினால் உலகத்தவர் அனைவரும் பல்வேறு வழிகளில் பாதிப்படைந்திருக்கின்றனர். இதைப் பயன்படுத்தி சிலர் வியாபாரத்தில் வளர்ச்சியடைந்தும் இருக்கிறார்கள். இங்கு வருந்தத்தக்க விடயம் என்னவெனில் 70ரூபாவிற்கு விற்பனைசெய்யும் சிகரட்டில் 1ரூபா இலாபம் இருக்கிறது. 20ரூபாவிற்கு விற்கும் மாஸ்க்கில் 15ரூபா இலாபம் இருக்கிறது.

இதிலிருந்து அந்த வியாபாரிகளின் சமூக அக்கறையை அளவிடமுடியும். ஐந்துபேர் கொண்ட குடும்பமொன்றிற்கு ஒரு நாளைக்கு குறைந்தது 5 மாஸ்க் தேவை. அதற்கு 100 ரூபாவிற்கு மேல் செலவாகிறது. தற்போதைய பொருளாதார நிலையில் ஒவ்வொரு குடும்பமும் பல நெருக்கடிகளை சந்திக்கிறது.

இதை பல வியாபாரிகள் உணர்வதில்லை. அதிகமாக விற்பனையாகிக்கொண்டிருக்கும் பொருளுக்கு இவ்வளவு இலாபம் தேவைதானா? சிறியளவிலான சில கடைகளில் மாஸ்க் 6ரூபாவிற்கு விற்பனை செய்கிறார்கள். ஆனால் பெரியளவில் வியாபாரம் செய்யும் வியாபார தளங்களில் 20 ரூபாவிற்கு விற்பனை செய்கிறார்கள். இவ்வாறு பல விடயங்களை அவதானிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதாபிமான நோக்குடன் விற்பனை செய்யவேண்டிய பொருட்களில் அதிக இலாபம் சம்பாதிக்க முற்படுவது அநியாயமானது. இவ்வாறான விடயங்களை. குறித்த வியாபாரிகள் உணர்ந்து சமூக அக்கறையுடன். செயற்படவேண்டும். மற்றவர்களை நலிவடையச்செய்து நாம் மட்டும் வாழ்ந்து என்னத்தை அடையப்போகிறோம்?

“எங்கட வீட்டில எல்லோரும் கொறோனா ஊசி போட்டுவிட்டார்கள், நான் போடவில்லை, உது கட்டாயம் பக்கவிளைவு இருக்கும், ஆளை வேளைக்கு முடிச்சிடும். நான் கடைசிமட்டும் போடமாட்டன்.” என்று ஒருவர் புத்திசாலித்தனமாக தம்பட்டம் அடித்தார். “அடேய், எல்லோரும் போய்ச்சேர்ந்த பிறகு நீ மட்டும் இருந்து என்ன செய்யப்போகிறாய்” என்றார் மற்றவர்.

# த(ா)ரம்

இ.டிலான், கோவில்குளம்.

பெண்மை அது மென்மை என்பர்
ஆனால் அவளை பூ வடிவில்
புயலென்பேன்.
அவளால் அழுவதற்கு
மட்டுந்தான் முடியும் என்பர்.
இல்லை என் கட்டமைப்புகளை
எல்லாம் கண்ணும்கருத்துமாய்
ஆள்பவளே அவள்தான்.
பயந்த சுபாவம் என்பர்
என் பின்னால் அவள் நின்றாலே
படையொன்று அணிவகுத்து
நிற்கும் பலம் பெறுவேன்.
பெண்புத்தி பின்புத்தியாம்
உண்மைதான்
என் நெருக்கடிகளில் நான்
அடிக்கடி ஆலோசனை பெறுவது
அவளிடந்தான்.
வெளுத்ததெல்லாம் பாலென்று
நான் நம்ப...
புன்னகைத்தபடியே புலனாய்வு
செய்து அது கள்ளென்று
கண்ணிமைக்கும் நேரத்தில்
அறிக்கையிடுவாள்.
என் கவனக்குறைவுகளிலெல்லாம்
மிகக் கவனமாக இருப்பவள்
அவளே.
அவள் சத்தமிடுவதால்தான்
என்னுள் சாதிக்கும் வேகம்
பிறக்கிறது.
அவள் முத்தமிட்டால்தான் என்
முதுமைகூட மூப்பிழக்கிறது.
தாயென்பேன் அவளைத்
தாரமென்பேன் வரமென்பேன்
பெற்ற வரங்களிலெல்லாம்
தரமென்பேன்.
எவ்விடர் வரினும் தொடர்வேன்
என் பயணம்
அவள் துணை கொண்டு
தடையுடைத்து நடை
கொள்வேன் அவள் கரம்பிடித்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாகதீபத்தின் வன்னிச்சிதறல்கள் ③

இரா.ஜயமோகன்
வரலாற்றாய்வாளர்

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இலங்காபுரி என்று அழைக்கப்பட்ட ஈழத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பேசப்பட்ட மொழியே வரலாற்றுக் காலத்திலும் பேசப்பட்டது. அத்துடன் இங்கு வாழ்ந்த மக்கள் திராவிடர் என்று ஆதாரப்படுத்தும் ஆய்வுகள் அவர்கள் திராவிட மொழிகளில் மிகப் பழமையான எலு, எழு, ஈழு எனப் பலவாறு அழைக்கப்பட்ட ஒரு மொழியை பேசி வந்துள்ளமையையும் குறிப்பிடுகின்றன. இதனையே ஈழு மொழி அல்லது எழு மொழி பேசிய மக்கள் கூட்டம் வாழ்ந்த பிரதேசம் ஈழம் என அழைக்கப்பட்டதாக முதலியார் செ.இராசநாயகம் கருதுகிறார்.




மேலைத் தேசத்தவர்கள் ஈழத்தை (Sailan) செயிலண், (Zeilan) சைலண், (Ceylon) சிலோன் என பலவாறு திரிபு படுத்தி உச்சரித்தனர் என "இலங்கையில் தொல்லியல் ஆய்வு களும் திராவிட கலாசாரமும்" என்ற நூலில் ஜி.தனபாக்கியம் குறிப்பிடுகின்றார்.

பண்டைய ஈழம் இருநாடுகளாகக் காணப் பட்டது. அரிப்பு, கடம்பநதி (மல்வத்து ஓயா, அருவியாறு), மகாவிலாச்சி (மதவாச்சி) தந்திரிமலை, அனுராதபுரம், நாகபொக்கணை, திரிகூடம் ஆகிய வற்றுக்கு வடக்கே இருந்த பிரதேசம் நாகதீபம் என அழைக்கப் பட்டதை "ஈழத்தவர் வரலாறு" நூலின் மூலமாக குணராசா.க குறிப்பிட்டுள்ளார். ஏனைய பகுதி தாமிரபரணி என்று வழங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. அவ்வகையில் நாகதீபத்தில் நாகத் தமிழரும் அவர்களோடு இயக்கத் தமிழரும் வாழ்ந்துள்ளனர்.

நாகதீபத்தில் மிகவும் பழமைச் சிறப்புடைய பகுதியாக வெங்கலச் செட்டிகுளம் பிரதேசமே விளங்கியுள்ளது. இப்பகுதியானது மேலே குறிப்பிட்டவாறு அரிப்பு, கடம்பநதி, மகாவிலாச்சி, தந்திரிமலை, அனுராதபுரம், நாகபொக்கணை, திரிகூடம் வரை பரந்து காணப் பட்டுள்ளது. இப்பகுதியிலேயே பஞ்ச ஈச்சரங்களில் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், சந்திர சேகரீச்சரம், முன்னேஸ்வரம் ஆகிய ஈச்சரங்கள் சிறப்புப் பெற்றுள்ளன. ஏனைய நான்கு ஈச்சரங்களும் மீள் எழுச்சி பெற்ற போதும் வெளவாலை இராசதானியில் சிறப்பு பெற்ற சந்திரசேகரீச்சரம் ஈற்றில் போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்டது. இன்றும் வெளவாலை தீர்த்தக் கேணியூடாக அருள்பாலிக்கும் சந்திரசேகரீச்சரம் தொடர்பாக பின்னர் விரிவாக நோக்குவோம்.

இவ்வாறு வெளவாலை இராசதானியில் நிலைபெற்ற பூர்வீகக் குடிகளே கப்பாச்சி,வாகை கட்டிய உலுக்குளம், பெரிய நொச்சிகுளம், சின்னத் தம்பனை, மதவு வைத்த குளம், பாவற்குளம்,ஒலுக்குளம், இராஜேந்திரன் குளம், நெளுக்குளம், குடியிருப்பு, சாஸ்திரி கூழாங்குளம், கிடாச்சூரி, பம்பைமடு என வவுனியா பிரதேசம் எங்கணும் பரம்பலடைந்து வாழ்ந்துள்ளனர். இவற்றை ஆய்வுகள் ரீதியாக உறுதிப்படுத்த முடியும். அத்துடன் இப்பிரதேசங்களில் நாக சிற்றரசர்களின் எச்சங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றோடு இப்பகுதிகளில் ஏறத்தாழ 15 – 30 அடி வரையான ஆழத்தில் நிலக்கீழ் நகரங்கள் புதையுண்ட நிலையில் இருப்பதுவும் குறிப்பிடத்தக்கது. இவற்றை முறையான ஆய்வுகளுக்கு உட்படுத்துகின்றபோது மேலும் வியக்கத்தக்க தகவல்கள் வெளியாகும்.

வவுனியாப் பிரதேசங்களில் உள்ள தொன்மையான நீர்நிலைகளைக் கொண்டு நோக்கும்போது பூர்வீக நாகத் தமிழரின் அறிவியலைக் கண்டுணர முடிகின்றது. குறிப்பாக பாவற்குளம், மதவு வைத்த குளம், சின்னத்தம்பனை, நெளுக்குளம், நாகர் இலுப்பைக்குளம் போன்ற நீர்நிலைகளின் அணைக்கட்டுகளில் இன்றும் நேர்த்தியாக செதுக்கப்பட்டு நாக வழிபாட்டு புடைப்புச் சின்னங்களாக சான்றுரைக்கும் நாக சின்னங்கள் அவற்றை அண்டிய பகுதிகளில் ஈமத்தாழிகள், அரண்கள்,கற்றூண்கள் எனத் தொடர் சான்றுகள் தமிழரின் பூர்வீகச் சிறப்பை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு பயமாயிருக்கிறது

கமல், ரஞ்சன், ராதா
அமல், அப்துல், கிருஷ்ணா,
சின்ன கல் ஒன்றிற்காக
சண்டையிடும் போது
நீங்கள்......
எனக்கு பயமாயிருக்கிறது

ஆமாம்
எனக்கு பயமாயிருக்கிறது..!
உங்களது பெரியோர்
பள்ளி,விகாரை,கோயில்களை
தீ வைப்பார்களா.....?
எனக்கு பயமாயிருக்கிறது.....!

சிறு எறும்பிற்கும் கருணை காட்டும்
என் மகன்,
அந்த எரியும் உடல்களை கடந்து
ஆயுதம் ஏந்தி
போர்க்களம்
செல்வானோவென.....?
எனக்கு பயமாயிருக்கிறது.....!

மணல் வீடு கட்டி விளையாடிய
அவனது தோழி
ராஜலக்ஷ்மியின் மகள் ராஜினி,
அவனது நண்பர்களால்
கற்பழிந்து மரணிப்பாளோ.....?
எனக்கு பயமாயிருக்கிறது...!

அவள் காளியாக
மீண்டெழுந்து,
உங்களை வதம் செய்வாளோ...?
எனக்கு பயமாயிருக்கிறது


ஆமாம்
எனக்கு பயமாயிருக்கிறது....

இரவுகளில் கரும்பேய்கள்
கதவுகளை உடைத்து
உங்களை எங்கெல்லாம்
கடத்துவார்களோ....!?
எனக்கு பயமாயிருக்கிறது..!

ராசிக், ராமன், ராதா
நிசல், மானெல்,மேதா........
எனக்கு பயமாயிருக்கிறது

பிள்ளைகளே
எனக்கு பயமாயிருக்கிறது......!

சிங்களத்தில்:
சுஹர்ஷனி தர்மரத்ன.
தமிழில் : இரா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் சர்வதேச மகளிர் தினம்

பொருளாதார நெருக்கடியும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்களும் என்ற கருப்பொருள்களில், நூற்றுப் பதினோராவது சர்வதேச மகளிர் தினம் 20.03.2022 அன்று வவுனியா தேசிய கலை இலக்கியப் பேரவையால் பூந்தோட்டம் தேசிய கலை இலக்கியப் பேரவை மண்டபத்தில் தோழர் சூடாமணி அரங்கில் தோழர் பிரசாந்தினி தலைமையில் நிகழ்ந்தது.

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு செயலாளர் மோகனதர்சினி சிறப்புரையாற்ற, தொடக்க உரையை பெண் விடுதலை சிந்தனை அமைப்பு உறுப்பினர் அபிராமிசெல்வசிறியும் கருத்துரைகளை வவுனியா தெற்கு வலய தமிழ் பாட ஆசிரியர் ஆலோசகர் த.நிறைமதியும் பண்டாரவன்னியன் புத்தகசாலை உரிமையாளர் நிருஜா கார்த்தீபனும் வழங்கினர்.

செல்விகள் அ.தேவமனோகரியும் மிகிரா பகீரதனும் கவிதை படித்தனர். நன்றியுரையை பெண் விடுதலை சிந்தனை அமைப்பு உறுப்பினர் அருள்மொழி சதீஸ்வரனும் வழங்கி நிறைவுபெற்றது.

பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளை எதிர்த்து சமத்துவ வாழ்விற்காய் முன்செல்வோம் என்ற துண்டுப்பிரசுரம் அழைப்பிதழுடன் சேர்த்து வழங்கப்பட்டதுடன் வடபிராந்திய பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் சார்பில் பிரசாந்தினி அவர்களால் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# காந்தீ

பூங்கோதை

ஆழியில் எழும்பி - ஓர்
ஆழி சக்கரத்தால்
'ஆ 'ஏழினைப் பூட்டி
அகிலத்திற்கு ஆருயிர்
அளித்திடும் ஆதவனே
ஆதாயம் அலைந்தா
ஆணைச்சக்கரம்
செலுத்துகிறாய்...
அல்ல அல்ல

ஓ! புரிகிறது
காலையில் காந்தமாய்
நண்பகலில்
காயும்தீயாய்
மாலையில்
தீப்பிழம்பாய்
மயங்கச் செய்திடும்
நீதானே
காந்தீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முதல் பெண்ஆளுமை

லூயிசா நேசம் சரவணமுத்து (1897 - 1941) இவர் இலங்கை அரசாங்க சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழ்ப் பெண். அரசாங்க சபைக்கு இடம்பெற்ற தேர்தல்களில் இவர் கொழும்பு வடக்குத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.



பொறியியலாளரான ஏ. அருணாசலம், எமிலி தங்கம்மா குக் ஆகியோரின் மகளான நேசம் 1897 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி கற்றவர். இவர் மருத்துவர் சேர் இரத்தினசோதி சரவணமுத்து என்பவரை 1915 ஆம் ஆண்டு திருமணம் செய்தார்.

1932 மே 30ந் திகதி நடைபெற்ற இடைத்தேர்தலில் நேசம் சரவணமுத்து போட்டியிட்டார்.

இடைத்தேர்தலில் நேசம் சரவணமுத்துவுக்கு ஆதரவாகச்செயற்பட்டவர்களில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, சட்டசபையில் அப்போதைய உதவிச் சபாநாயகர் எஃப். ஏ. ஒபயசேகராவும் முக்கிய மானவர்கள். நேசம் சரவணமுத்துவை எதிர்த்துப் போட்டியிட்டவர் எச். எம். பீரிஸ். நேசம் சரவணமுத்து 8681 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

இன்னொரு இடைத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை நேசம் சரவணமுத்துவுக்கு ஏற்பட்டது. அவரது தேர்தல் செல்லுபடியற்றது எனத் தேர்தல் ஆட்சேபனை வழக்கில் தீர்ப்பாகியது. எனினும் அவரது குடியியல் உரிமை பறிக்கப்படாததால் இரண்டாவது இடைத் தேர்தலிலும் அவர் போட்டியிட்டார்.

இரண்டாவது இடைத் தேர்தல் 1932 நவம்பர் 12 ஆம் நாள் நடைபெற்றது. தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட எச். வி. காசிச்செட்டியிலும் பார்க்க 8106 மேலதிக வாக்குகள் பெற்று நேசம் சரவணமுத்து தெரிவானார். இரண்டாவது அரசாங்க சபைத் தேர்தல் 1936ஆம் ஆண்டு நடைபெற்றது. நேசம் சரவணமுத்து மீண்டும் வெற்றி பெற்றார். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து 1941 ஜனவரி 19ஆம்திகதி தனது நாற்பத்தி நான்காவது வயதில் இறந்தார்.

அன்னாரின் சாதனைகளை நினைவுகூர்ந்து வாழ்த்துவதில் பசுமை பெருமைகொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழியின் புத்தி சாதுர்யம்

கலாபூர்வன்

வேரல் வேலி வேர்க் கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார் அஃது அறிந்திசினோரே-சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு,
இவள் உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே!

சங்க காலத்தில் புகழ்மிக்க புலவர் கபிலர் எழுதிய இப்பாடல் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

இரவுப்பொழுதை குறிப்பால் உணர்த்துவது; அதாவது இரவு நேரத்தில் தலைவனும் தலைவியும் சந்திப்பது வழக்கம். அவ்வேளையில் வந்து செல்லும் தலைவனைத் தோழி சந்தித்து கூறுவதாக அமைகிறது இப்பாடல்.

**இதன் பொருள்**

மூங்கிலை வேலியாக உடைய, வேரில் (பலா) பழங்களையுடைய பலா மரங்கள் செறிந்த மலைப்பக்கத்து தலைவனே, உனது நாட்டுப் பக்க மலையில் வளர்ந்துள்ள பலாவின் சிறிய கொப்பில் பெரிய பழம் தொங்குவது போல இத்தலைவியின் உயிராகிய கொப்பு மிகவும் சிறியதாக உள்ளது. அதன் மேலுள்ள காமநோய் எனும் பழமோ மிகவும் பெரியது. இந்நிலையை உன்னையன்றி வேறு யாரறிவார். எனவே அவளை நீ ஏற்றுக் கொள்.

பலாமரத்தைக் காப்பதற்கு இயற்கை வேலியாக மூங்கில் புதர்கள் உள்ளன. தலைவியின் நாணமும் நிறையும் (ஒழுக்கமும்) அவளைக் காத்து நிற்பதாக உணர்த்தப்பட்டுள்ளது. வேரில் பழுக்கும் பலாவின் வேறாக கொப்பில் பழுக்கும் பழம் உணர்த்தப்படுகிறது.

வேரில் பழுத்தால் அதனைத் தரை தாங்கும். கொப்பில் பழுத்தால் அது பற்றுக்கோடு இன்றி வீழும் நிலையில், அதனைப் பறித்து நுகர்வோரைப் போல, தலைவியின் நிலையறிந்து மணம் செய்து கொள்ளல் வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. மேலும் சிறுகொம்பு எனத் தலைவியின் இளமையும் மென்மையும் உணர்த்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் தவச் சிறிது. காமமோ மிகப் பெரிது.

காமம் என்பது உயிரில் தோன்றி வளரும் உணர்வு. பழம் தன் அளவின்றி மேலும் முதிர்ந்தால் தன்னைத் தாங்கியுள்ள காம்பையும் முறித்து கீழே விழுந்து பயன்படாது போகும். அதுபோல தலைவியின் காமமும் உனக்கு பயன்படாமல் உயிரை மாய்த்து ஒழியும் என்று கூறுவது கவனத்துக்குரியது.

தலைவன் மணம் செய்ய நாட்டமில்லாது தட்டிக்கழிப்பது தெரிய தோழி வேரில் பழுத்த பழம்தான் உனக்குத் தெரிகிறது. கொப்பில் பழுத்த பழம் உனக்கு த் தெரியாதுதானே எனக் கூறுவது தலைவனை மட்டுமல்ல படிப்போரையும் சிந்திக்கத் தூண்டுவது இப்பாடலின் சிறப்பு.

## பசுமையூடாக வாசிப்பை ஊக்குவிப்போம்

நண்பர் சாள்ஸ் சுவீடன் நாட்டிலிருந்து ரூபா 15000ஐ பசுமையின் வளர்ச்சி நிதியாக அனுப்பிவைத்ததுடன், ஆர்வமுள்ள வாசகர்களைச் சென்றடையச் செய்யுமாறும் கோரியிருந்தார். அவரது வேண்டுகோளை ஏற்று சிறுபிள்ளைகளையும் முதியோரையும் பராமரிக்கும் இல்லங்களுக்கு ஆண்டு முழுவதும் பசுமை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். ஆர்வமுள்ளவர்கள் எம்முடன் இணைந்து பசுமையை முன்னேற்றி, வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கலாம்.

இரண்டு வாசகர்கள் தாங்கள் படித்த பாடசாலைகளுக்கும் தங்கள் ஊர் நூலகங்களுக்கும் குறிப்பிட்ட பிரதிகளை அனுப்புமாறு கூறி அவைகளுக்கான சந்தாவினைச் செலுத்தியுள்ளனர்.

அவர்களது பங்களிப்பு பசுமை சஞ்சிகைக்கும் பேருதவியாக அமைந்தது.

## வாசகரின் உள்ளத்திலிருந்து

வணக்கம். "பசுமை" இதழ் கிடைத்தது. நன்றி. ஆண்டுச் சந்தாவை இலங்கை வங்கியில் செலுத்திவிடுகிறேன். இதழ் நன்றாக வந்திருக்கிறது. மஹாகவியின் குறும்பா (முத்தெடுக்க...) தவறாகப் பதிவிடப்பட்டுள்ளது. -

உடுவில் அரவிந்தன், ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

இதே கருத்தை திரு.எஸ்.பொஸ்கோ அவர்களும் தெரிவித்துள்ளார். அன்பர்களின் கருத்தை பசுமை கவனத்துடன் செவிமடுத்து திருத்திக் கொள்ளும். உங்களது கருத்துகள் எம்மை மேலும் செழுமைப்படுத்தும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறன்களை வளர்க்கும் வாசிப்புப் பழக்கம்

- பி.மாணிக்கவாசகம்

வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என்பார்கள். அது உண்மையான, அனுபவம் மிக்க ஒரு கூற்றாகும். ஆனால் வாசிப்புப் பழக்கம் மக்களிடையே இப்போது அருகியிருப்பது கவலைக்குரியது. பொதுவில் வாசிப்பு என்பது அனைவருக்கும் பயனுள்ளது. வாசிப்பின் மூலம் கிடைக்கின்ற மனத் திருப்தியையும், விடய ஞானத்தையும் வாசிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிக்காதவர்கள் இழந்து விடுகின்றார்கள்.

வாசிப்பு, முக்கியமாக மாணவர்கள், ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பேச்சாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த அனைவருக்கும் இன்றியமையாத தாகும். ஆயினும் அறிவியல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள தற்காலத்தில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் படிமுறை வளர்ச்சிக்கமைய வளர்த்தெடுக்கப் படவில்லை. இது முக்கியமாகக் கவனத்திற் கொள்ளத்தக்கது.

மாணவர்கள் வகுப்பறைக் கற்றலில் பெறுகின்ற பாட அறிவு, விடய அறிவானது, வாசிப்பின் மூலமான தேடலில் விரிவடைகின்றது. அந்த வாசிப்பின் மூலமான தேடல் புதிய சிந்தனைகளுக்கும் ஆக்கத் திறன் வளர்ச்சிக்கும் வித்திடுகின்றது.

ஆனால் தற்கால மாணவர்கள் தமது பாடப்புத்தகங்களைக்கூட முறையாக வாசித்து விடயங்களைக் கற்பதில்லை என்று பொறுப்புள்ள ஆசிரியர்கள் கவலைப்படுகின்றார்கள். மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்குப் பதிலாக பெரும்பான்மையான ஆசிரியர்கள் குறிப்பு முறையிலான பாடச் சுருக்கத்தை மாணவர்களுக்கு அளித்து அவற்றின் ஊடாகப் பரீட்சைகளில் புள்ளிகளைக் குவிக்கின்ற கற்றல் கற்பித்தல் உத்தியைக் கையாள்கின்றார்கள்.

இந்த முறைமையானது மாணவர்களை பரீட்சைகளில் பிரகாசிப்பதற்கும் புள்ளிகளைப் பெற்று சிறப்பாகத் தேர்ச்சி அடைவதற்கும் வழிசமைத் துள்ளது. கற்றலின் தகுதியும் திறனும் பரீட்சைகளிலேயே அளவிடப் படுகின்றது. பரீட்சைகளே மாணவர்களின் கற்றல் வளர்ச்சியின் படிக்கற்களாகத் திகழ்கின்றன. எனவே பரீட்சைகளில் மாணவர்கள் சிறப்பாகத் தேர்ச்சி அடைவதற்கான கற்றல் கற்பித்தல் உத்தியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்தானே என்று ஆசிரியப் பெருமக்கள் வாதிடுகின்றார்கள். அவர்களுடைய வாதத்தை மறுப்பதற்கில்லை.

பரீட்சைகளில் சிறப்பாகத் தேர்ச்சி அடையும் மாணவர்கள், தங்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் தமது பாடசாலைகளுக்கும், பெற்றோருக்கும் தங்களுடைய பிரதேசத்திற்கும் பெருமையைத் தேடிக்கொடுக்கின்றார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. இவ்வாறு பெருமையைத் தேடித்தரும் மாணவர்களை ஊடகங்கள் முதன்மைப்படுத்தி, அவர்களுடைய கற்றல் அனுபவங்களை ஏனைய மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் வெளிச்சமிட்டுக் காட்டி பெருமைப்படுத்துகின்றன.

ஆனால் இத்தகைய மாணவர்களில் குறிப்பிட்ட சிறுதொகையினரைத் தவிர ஏனையோர் கிணற்றுத் தவளையாக, பாடவிதானத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களில் திறன் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்களிடையே வாசிப்புப் பழக்கமும் அறிவுத் தேடலும் வளர்த்தெடுக்கப்படாமையே இதற்குக் காரணம் என்பதை மறுக்க முடியாது.

பாடசாலைக் கல்வியில் சிறப்பாகத் தேர்ச்சி அடைந்து பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்கின்ற மாணவர்கள் பாடசாலைக் கற்றல் முறைமையிலேயே செயற்படத் துடிக்கின்றார்களே தவிர, அந்த உயர் கல்வி முறைமைக்கு ஏற்ற வகையில் பாடத்திட்டத்துடனான விடயங்களில் விசாலமான அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கு அவசியமான வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்று உயர் கல்வி வளர்ச்சியில் பற்றுகொண்ட பல்கலைக்கழக ஆசிரியர்களும், துணைவேந்தர்களும் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

பல்கலைக்கழகக் கல்வி என்பது பாடசாலைக் கல்வியைப் போன்றதல்ல. அது, ஆய்வு முறைமையிலான விடய அறிவைத் தேடிக்கற்கும் முறைமையைக் கொண்டதாகும். பாடசாலைக் கல்வியின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் விடய அறிவை எத்தனை மாணவர்கள் தேடிப் பெறுகின்றார்கள் என்பது கேள்விக்குறியாகும்.

பல்கலைக்கழக நூலகத்தில் பெரும் எண்ணிக்கையில் பெறுமதியான பல் துறை நூல்கள் குவிக்கப்பட்டுள்ள போதிலும், மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதில்லை என்பது வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் த.மங்களேஸ்வரன் அவர்களின் கூற்று.

தற்போது ஏற்பட்டுள்ள இணையதளப் பாவனையின் செல்வாக்கையடுத்து, பல்கலைக்கழக நூலகத்தின் புத்தகங்களை டிஜிட்டல் முறையில் பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து இணையதள வழியில் அவற்றை மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான முயற்சியில் கவனம் திரும்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடகங்களின் பயன்பாடு அதிகரித்துள்ள இன்றைய சூழலில் செய்தி இதழ்களையும், புத்தகங்களையும் நாட வேண்டிய அவசியம் அற்றுப் போயுள்ளது. அனைத்தையும் வலைத்தளங்களின் ஊடாகவும், சமூக ஊடகங்களின் மூலமாகவும் இலகுவில் அடையக் கூடியதாக இருப்பதே இதற்குக் காரணம்.

முன்னர், பத்திரிகைகளையும், புத்தகங்களையும் தேடி நூலகங்களுக்குச் சென்று வாசிக்க வேண்டிய நிலைமை நிலவியது. இப்போது செய்தித் தாள்களைக் கைத்தொலைபேசியின் ஊடாக இருந்த இடத்தில் இருந்தே பெற்று வாசிக்கக் கூடிய வசதிகள் உருவாகி இருக்கின்றன.

ஆனால் இந்த வசதிகளைக் குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களும் மற்றவர்களுமே பயன்படுத்துகின்றார்கள். ஏனையோர் குறிப்பாக செய்தித் தாள்களை மேலோட்டமாகப் பார்வையிடும் தன்மையைக் கொண்டிருக் கின்றார்கள். பலர் செய்தித்தாள்களைக் கண்டு கொள்வதில்லை. அதே வேளை இணைய தளங்களின் ஊடாக வெளியிடப்படுகின்ற தொலைக் காட்சிகளிலும் மேலோட்டமான பார்வையைச் செலுத்துவதன் மூலம் அவர்களுடைய நாட்டு நடப்பு பற்றிய தேடல் முடிவடைந்து விடுகின்றது.

வலைத்தளங்களிலும் முகநூலிலும் அதிக நேரத்தை செலவிடுகின்ற போக்கு இளைஞர்கள் மட்டுமன்றி, வயதானவர்களையும் இப்போது பற்றிப் பிடித்திருக்கின்றது. தொலைக்காட்சி உள்ளிட்ட சிறு சிறு காணொளிகளின் ஊடாக செய்திகளையும் ஏனைய விடயங்களையும் பார்த்து ரசிக்கின்ற தன்மை வளர்ச்சி அடைந்துள்ளதாக இணையதளங்கள் மற்றும் வலைத் தள, முகநூல் பாவனை குறித்து ஆய்வு செய்துள்ள அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

அது மட்டுமன்றி சிறு சிறு நறுக்குளாகப் பதிவிடப்படுகின்ற திரைப்படக் காணொளிக் காட்சிகளில் இளைஞர்கள் அதிக நேரத்தை செலவிடுகின்ற ஒரு போக்கும் அவதானிக்கப்பட்டுள்ளது, அதேபோன்று, பயனுள்ள இலக்கிய மற்றும் ஆன்மீக அரசியல் காணொளி நறுக்குகளை ரசிப்பதில் வயதானவர்கள் தமது இணையதள தேடல்களில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

இணைய தளத்தின் நன்மைகளில் ஒன்றாகக் கட்புலப் பார்வை இழந்தவர்களுக்கான ஒலி வடிவப் புத்தகப் பதிவுகள் திகழ்கின்றன. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி வடிவப் புத்தகங்களை "வாசிப்பதன்" மூலம் அவர்கள் பரந்த அறிவைப் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் இணைய தளங்களின் ஊடாகப் பெருக்கெடுத்து வருகின்ற தகவல்களில் சாதாரண மனிதர்கள் அனைவரும் தமக்குரியவற்றைத் தேடிப் பெற்றுக்கொள்வதில்லை. இது வாசிப்புப் பழக்கம் அற்றுச் செல்கின்றமையின் பிரதிபலிப்பாகும்.

அயல் நாடாகிய இந்தியாவின் தொலைக்காட்சிகளில் சமூகத்தின் நேரடி பங்களிப்பு தன்மை கொண்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்ற படித்தவர்கள் மட்டுமன்றி சாதாரண மக்களும் ஆற்றொழுக்கு போன்ற பேச்சாற்றல் மிக்கவர்களாகத் திகழ்வதைக் காண முடிகின்றது. அவர்களின் அந்த ஆற்றொழுக்குப் பேச்சுக்களில் ஆழமான கருத்துக்களும், அவற்றை அவர்கள் மிக சாதுரியமாகவும் சுவை மிகுந்ததாகவும் வெளிப்படுத்துவதையும் காணலாம்.

இதனைச் சுட்டிக்காட்டிய வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் மங்களேஸ்வரன் அவர்கள் தமிழகத்தில் சாதாரண முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் கூட வாசிப்புப் பழக்கத்தை முக்கியமாகக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றார். முக்கிய சந்திகளில் வாகனங்களை நெறிப்படுத்துவதற்காகப் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகள் வாகனங்களை நிற்கச் செய்வதற்காக ஒளிருகின்ற அந்த குறுகிய சில நொடிகள் அடங்கிய நேரத்தை தங்கள் கைவசம் வைத்திருக்கின்ற சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிக்கின்ற பழக்கத்தை முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் கொண்டிருப்பதை அவதானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"இத்தகைய வாசிப்புப் பழக்கமே தமிழக மக்களை பேச்சாற்றல் மிக்கவர்களாகத் திகழச் செயதிருக்கின்றது. ஆனால் எம்மவர்கள் மத்தியில் அத்தகைய வாசிப்புப் பழக்கம் இல்லை. பேச்சாற்றலுடன் கூடிய கருத்து வெளிப்பாட்டுத் திறனும் இல்லை. கற்றறிந்தவர்களிலும் குறிப்பிட்ட சிற எண்ணிக்கையானவர்களே பேச்சாற்றலையும் கருத்து வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டிருக்கின்றார்கள்" என்கிறார் அவர்.

வாசிப்பின் மூலம் பல நன்மைகள் கிடைக்கின்றன. அதனால் எம்மை அறியாமலே பல திறன்கள் வளர்கின்றன. வளர்க்கப்படுகின்றன. அந்தத் திறனும் பயன்களும் சிறப்பாக வாழ்வதற்குரிய மனப்பக்குவத்தை அளிக்கின்றது. எனவே வாசிப்பின் பயன்கள் குறித்த தெளிவைப் பெற்று வாசிப்புப் பழக்கத்தை அனைவரும் கடைப்பிடிப்பது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத வைத்த தமிழ்

கேணிப்பித்தன்



எண்ணத் தறியில் இழையோடும்
இனிய உணர்வுக் கனவுகளை
வண்ணத் தமிழில்
கோர்த்தெடுத்து
வடிவம் கொடுத்தால் கவியாகும்

கவிதையில் கதையும்
உள்ளிருக்கும்
கவிதையில் விதையும்
பொதிந்திருக்கும்
கவிதையில் கவியும்
நயம்படைக்கும்
கவிதையைப் படிக்க சுகம் விரியும்

தாளம் போட்டுப் பாடிடலாம்
தகதிமி தகதிமி போட்டிடலாம்
ஞாலம் போற்றும் ஓசைநயம்
நம்மை மறந்து ஆடச்செய்யும்.

எழுத எழுதக் கவிபொங்கும்
எழுந்த உணர்ச்சிகள் அலைபுரளும்
பழுது இல்லாக் கருவூலம்
பாய்ந்து கவிதையாய்
ஊற்றெடுக்கும்

சூரியன் என்றும் மறைவதில்லை
சுடரும் என்றும் குறைவதில்லை
பாரிய சுழற்சி புவி கொள்ளும்
பகலும் இரவும் பரந்து கொள்ளும்

பருவ காலங்கள் உருவாகும்
பாரும் வளம்பெற்று உயிர்வாழும்
இருளும் மெல்ல விழித்தெழுந்து
விடியலில் கவிதையில்
மெய்மறக்கும்

சூரியன் உதிக்கும் இராப்பகலும்
சேர்ந்து கொண்டு கூத்தடிக்கும்
வீரியக் கவிதைகள் பீறிடுமாம்
விரிந்து தவழ்ந்து இனித்திடுமாம்.

அற்புதக் கவிதைகள் எழுதுகின்ற
ஆற்றல் மிகுபுதுப் கவிஞர்களை
நற்தமிழ் செய்யத் தூண்டிநிற்கும்
நாதம் செய்யும் இன்பமயம்.

செவிவழி புகுந்து நரம்புகளை
சுண்டி இழுத்து சிந்தனையை
கௌவிக் கொண்டு ரீங்காரம்
மீட்டும் இசையில் மகிழ்வேனே

உலகெலாம் வாழும் தமிழர்களும்
உற்றுக் கேட்டுச் சுவைக்கவைத்து
பழுதிலா தமிழ்கவி வீச்சினையே
பரவச் செய்யும் சூரியனாம்.

எத்தனை கருத்துக் கருவூலம்
எழுந்து குரல்வழி அதிர்கிறது
எத்தனை உளங்களை ஆவலுடன்
எழுதத் தூண்டும் தமிழ்வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஆசிரியர்களின் அழகியற் செயற்பாடுகள்

திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்

முன்பள்ளி ஆசிரியர் குழந்தைகளோடு குழந்தைகளாக இணைந்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். குழந்தைகளின் இரண்டாவது பெற்றோராக செயற்படுபவர் ஆசிரியர். வீட்டிலிருந்து முதன்முதலாக வெளி உலகிற்கு காலடி எடுத்து வைக்கும் பருவமே முன்பள்ளிப்பருவம். கள்ளம் கபடமற்ற குழந்தைகளின் மனதிலே ஆசிரியரின் முகத்தோற்றமே முதன்முதலில் கற்றலைத் தூண்டுகின்றது. எனவே முன்பள்ளி ஆசிரியர் பின்வரும் விடயங்களில் தன்னை தயார்படுத்த வேண்டும்.

01. முகத்திலே புன்சிரிப்போடும் மலர்ந்த முகத்தோடும் கனிவான பேச்சோடும் குழந்தைகளை நாடுதல்.

02. சுத்தமான தூய்மையான உடல் அமைப்போடு எந்நேரமும் காட்சி கொடுத்தல்.
(கை .கால் தலை பற்கள் போன்ற அங்கங்களை மிகவும் சுத்தமாக வைத்திருத்தல்.)

03. அழகாக தன்னை அலங்கரித்து குழந்தைகளை அணுகுதல்.( அழகு குழந்தைகளைக் கவரும்)

**குழந்தைகளுக்கான கற்பித்தல் முறைகள்**

01. பிள்ளையை விளங்கி கல்வியை திட்டமிடுதல் வேண்டும்.

02. பிள்ளையின் இயல்பான வளர்ச்சிப்பாங்குக்கு ஏற்றவாறு கற்பித்தலை முன்னெடுத்தல்.

03. இயற்கையோடு இணைத்து இயற்கை சூழலில் கல்வியை ஆரம்பித்தல்.கற்பித்தல்.

04. புலக்காட்சிகளுக்கான பொருட்களை முன்வைத்து பாடங்களை ஆரம்பித்தல்.

05. மூடப்பட்ட அல்லது நான்கு சுவர்களால் அடைக்கப்பட்ட கட்டடத்திற்குள் வைத்து கற்றலில் ஈடுபடுவதைத் தவிர்த்தல்.

06. பிள்ளைகளுக்கு புதிய புதிய அனுபவங்களை பெற திட்டமிடுதல் வேண்டும்.

07. கற்றலை முன்னெடுக்கும் வகுப்பறைச் சூழலை அழகாகவும் காட்சிப்பொருள் நிறைந்ததாகவும் மாற்றியமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. குழந்தை ஓடி ஆடி விளையாடி சுதந்திரமாக செயல்படக்கூடிய முறையில் கற்பித்தலை முன்னெடுத்தல்.

**அழகியல் கற்பித்தலில் நுட்ப முறைகள்.**

முதலில் சிறிய சிறிய அபிநயங்களை, இசை ஒலிகளை இயற்கையோடும் பொருளோடும் சொல்லிக் கொடுக்க வேண்டும். இவ்வாறு சொல்லிக் கொடுக்கும்போது ஆசிரியர் தானும் குழந்தையாக குழந்தைகளின் சகபாடியாக மாற வேண்டும். செய்துகாட்டல் மிக மிக அவசியமானது. புன்சிரிப்போடும் உற்சாகமாகவும் குழந்தைகளை உற்சாகப்படுத்தி நல்ல ஊக்கல்களையும் வழங்க வேண்டும்.

01. பூவிரிதல்,மரம் அசைதல், மரம் பறவை, பூனை, நாய், பசு போன்ற சிறிய அபிநயங்களை ரசனையோடு கற்பித்தல்.

02. துள்ளுதல், ஓடுதல், பாய்தல்,கை தட்டல், கைகோர்த்தல், சிரித்தல், இருத்தல் போன்ற செயற்பாடுகளை செய்தல்.

03. கூவுதல், கத்துதல், குரைத்தல் போன்ற ஒலிகளை வாய்மூலம் எழுப்புதல்.

இவற்றையெல்லாம் ஆசிரியர் தானும் செய்து பிள்ளைகளையும் செய்ய விட வேண்டும். இதன் பின்பு மெல்லிய சத்தங்களுக்கு அமைவாக சிறிய அசைவுகளை சொல்லிக் கொடுத்தல்.

01. மான் துள்ளுதல், 02. மயில் அசைதல் 03.வாத்து நடத்தல், 4.முயல் பாய்தல், 05. குரங்கு தாவுதல்

கூடுதலாக மகிழ்ச்சிப்படுத்தும் உற்சாகப்படுத்தும் செயற்பாடுகளை ஆசிரியர் முன்னெடுக்க வேண்டும். கூட்டாக இயங்கும் அழகியல் செயற்பாடுகளின் மூலம் குழந்தைகள் இடையே ஒற்றுமை, சமூகமயம்,கூட்டுறவு, மகிழ்ச்சி என்பவற்றை ஏற்படுத்த வேண்டும்.

01. கைகளை கோர்த்து வட்டம் சுற்றுதல்.

02. கைகளை கோர்த்தபடி கால்களை தூக்கி அசைத்தல். மாறி மாறி கைகளைத் தட்டுதல்.

தோள்களில் கை வைத்து புகைவண்டி ஒலிஎழுப்பி (சுக்குப்பக்கு) சுற்றி வருதல்.

இவ்வாறான ஆரம்ப அழகியல் செயற்பாடுகளை எல்லாம் ஆரம்பத்தில் முன்னெடுக்கவேண்டும். இதன் பின்பே சிறிய சிறிய அபிநய பாடல்களை இசையோடும் சந்தத்தோடும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் 1

ஒன்று இரண்டு சொல்லுவோம்
ஓடி விளையாடுவோம்

உதாரணம் 2


புள்ளி புள்ளி மானே
துள்ளித் துள்ளி ஓடி வா

உதாரணம் 3

வண்ணத்துப் பூச்சி வண்ணத்துப் பூச்சி
பறக்குது பார் பறக்குது பார்

இவ்வாறான சிறிய பாடல்களுக்கு அபிநயத்துடனும் சந்தத்துடனும் கற்பிக்க வேண்டும். இலகுவான சிறிய அசைவுகளிலிருந்து படிப்படியாக அசைவுகளை விஸ்தரித்து செல்லலாம். குழந்தைகளை கட்டாயப்படுத்தி கற்பிக்கக் கூடாது. தானாக சுதந்திரமாக கற்றலுக்கு வரும்வரை ஆசிரியர்கள் பொறுமையாக தம் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். கற்றல் தூண்டிகளை மாணவர்களிடத்தே ஏற்படுத்த வேண்டும். அபிநயங்களை கற்பிக்கும்போது

01. கண்ணசைவு, கால் அசைவு, கழுத்தசைவு, கையசைவு போன்ற உடல் அவயவங்கள் மூலம் கருத்துகளை வெளிப்படுத்தும் திறனை ஏற்படுத்தலாம்.



02. அழுதல், சிரித்தல், மகிழ்ச்சி, உண்ணுதல், அழைத்தல், கோபம், பயம், வெறுப்பு, நித்திரை செய்தல், உற்சாகம் போன்ற சிறிய சிறிய சொற்களை சொல்லி முகபாவங்களின் ஊடாகவும் கையசைவுகள் ஊடாகவும் வெளிப்படுத்தச் செய்யலாம்.

இவ்வாறாக கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியர்கள் பொறுமை, தியாகம், சகிப்புத் தன்மை போன்றவற்றை கடைப்பிடிக்கவேண்டும். எந்நேரமும் தன் கவலைகளை மறந்து முகமலர்ச்சியோடும் கனிவான, அன்பான வார்த்தை பிரயோகங்களை உதிர்ப்பவராகவும் குழந்தைகள் மேல் அன்பு கொண்டவராகவும் இருத்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைசார் கல்வியும் தனிமனிதத்துவமும்

திருமதி.லீலா வசந்தகுமார், வவுனியா

மனிதன் மனிதனாக வாழ்வதே மனிதப் பண்பு. அவ்வாறு வாழ்வதனால் அவன் பல சட்ட திட்டங்களுக்கு அமைய நடத்தல் வேண்டும். மனித வாழ்வு மேம்படுவதற்கும் இதுவே காரணம். ஆதிமனிதன் மனம் போன போக்கில் தன் வாழ்க்கையை நகர்த்தியதற்கும் காரணம் அவன் ஒரு வரையறைக்குள் வாழ்வதற்குரிய வழிநடத்தல்கள் இல்லாமையே. வழி நடத்தல்களின்றி நாகரிகமற்று காடுகளிலும், குகைகளிலும், மழையிலும், வெயிலிலும் வாழ்ந்து கொண்டிருந்தவன் இப்போ சந்திரமண்டலத்தில் வாழ்வதற்கு வழிவகைகளைத் தேடிக் கொண்டிருக்கிறான் என்றால் அதற்குக் காரணம் அவன் கற்று அறிந்து செயல்படுவதே.

தனிமனிதனது வாழ்க்கையை தனித்துவம் ஆக்குவதும் சிறப்பாக மாற்று வதும் கல்வியே. அந்தக் கல்வியானது திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட வேண்டும். அதன் வெளிப்பாடாகவே முறைசார் கல்வியும் கலைத் திட்டத்தின் ஊடாக வடிவமைக்கப்பட வேண்டும்.அதன் வெளிப்பாடாகவே முறைசார் கல்வியும் கலைத்திட்டத்தின் ஊடாக வடிவமைக்கப்பட்டது. ஓர் இலக்கை நிர்ணயித்துக் கொள்வதும் அதை அடைவதற்கு பாடுபடுவதும் நேர முகாமைத்துத்தின் ஓர் அம்சம். இது முறைசார் கல்விக்கு மிக மிக அவசியம்.இங்கே செயற்பாடுகள் யாவும் ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கும். நமது நாட்டை எடுத்துக் கொண்டால் தனிமனிதனுக்காக எவ்வளவோ பணத்தை அரசு செலவழித்து கொண்டிருக்கின்றது பாடசாலைகள் சமூகத்தின் நம்பிக்கைக் குரியனவாகத் திகழ வேண்டும். சமூக முன் உரிமைகளில் பாடசாலை இடம்பெற வேண்டும் என்பதற்காக திட்டமிட்ட கல்விக் கொள்கைகள் நடைமுறையில் உள்ளன. பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம், நடத்தை,ஆளுமை தொடர்பாக அதிக கவனம் செலுத்துவது முறைசார் கல்வியின் வெளிப்பாடே.

சுயமாக சிந்திப்பவனுக்கு தட்டிக்கொடுத்தும் சுயசிந்தனை குறைந்தவர் களை ஊக்கப்படுத்துவதும் கல்வியின் முக்கிய குறிக்கோளாகும். பாடசாலையின் வகுப்பறைச் செயற்பாடுகள் யாவும் தனிமனிதனுக்குரிய தனித்துவமான செயல்பாடுகளாகக் காணப்படும். இங்கே மேலோன்-கீழோன், வசதி படைத்தவன் வசதி இல்லாதவன் எனும் வேறுபாடுகள் இல்லை. ஒவ்வொரு துறையிலும் புதுமையான விடயங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. கல்வி என்பது தொழிலுக்காக மட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின் எல்லைகளை விரிவு படுத்த வேண்டும் என்பதற்காகவும் கற்க வேண்டும் என்பதும் முறைசார் கல்வியின் நோக்கம்.இதனூடாக எல்லோருக்கும் கல்வி என்பதும் முறைசார் கல்வியின் தாரக மந்திரமாக உள்ளது.

தனி மனித, உள, சமூக, சேம நலன்களை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் இங்கே சிறப்பாகக் காணப்படும். புத்தாக்கக் கருத்துகளையும் செயற்பாடுகளையும் சேர்த்துக் கொண்டு அதனை செயற்படுத்துவதற்கான மூல வளங்கள், செயற்பாட்டுப் புத்தகங்கள், பயிற்சிக் கையேடுகள் என்பவற்றைத் தயாரித்து பாடசாலைக்கு வழங்க வேண்டும். எல்லா வயதுப் பிரிவினரும் விளையாட்டு மற்றும் அனைத்து விதமான செயற்பாடுகள் ஊடாகவும் தங்களை தாங்களாகவே வெளிப்படுத்து கின்றனர். தங்களைப் பற்றி கற்றுக் கொள்வதுடன் ஏனையவர்களுடனும் இடைத்தாக்கத்தை பேணுகின்றனர். இதனால் அவர் வாழும் உலகத்தை அறிந்து கொள்வதற்கும் முறைசார் கல்வி வழிவகுக்கின்றது.

கல்வியோடு மாத்திரம் நின்றுவிடாது இணைபாட விதான செயற்பாடுகளினூடாக தலைமைத்துவப்பண்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, வெற்றி தோல்விகளை ஏற்கும் மனவுறுதி, ஒருவருக்கொருவர் உதவுதல், பகிர்ந்துண்ணல், ஆளிடைத்தொடர்பாடல் என்பன மேலோங்கி காணப்படுகின்றன. ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கான பயிற்சிகள் திட்டமிடப்பட்டு பொருத்தமான காலவரை யறைக்குள் செய்து முடிக்கப் படுகின்றன. இதனூடாக ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் சார்ந்த மதக் கருத்துக்கள் போதிக்கப்படுகின்றன. சமயங்கள் காட்டுகின்ற வாழ்க்கை யின் தத்துவங்களும் நெறிமுறைகளும் எடுத்துக்கூறப் படுகின்றன. தனி ஒருவன் தான் சார்ந்த மதத்தின் மீது பற்றுக் கொள்ளவும் அது காட்டுகின்ற நெறிமுறைகளைப் பின்பற்றவும் இக்கல்வி முறை வழிகாட்டுகின்றது. சமயங்கள் காட்டுகின்ற சடங்குகளை ஒழுங்காக நிறைவேற்றுவதனூடாக மன அமைதி பெறுகின்றான். இதற்கான வழிப்படுத்தல்கள் முறைசார்ந்த கல்வி மூலமாக ஒழுங்கான முறையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

இதேபோன்று ஒருவன் நெறிபிறழ்வான நடவடிக்கையில் ஈடுபடும் போது உடனடியாகவே அவனுக்கு சிறந்த வழிகாட்டல்களும் ஆலோசனை களும் வழங்கப்படுகின்றன.இன்னது செய்தால் இப்படி நடக்கும், அதனால் ஏற்படும் விளைவுகள், சமுதாயம் அதனை எப்படி நோக்கும் என்பதையெல்லாம் தெளிவுபடுத்தி அவனை அதிலிருந்து காப்பாற்றி விடுகின்றது. தனிமனிதன் ஒருவனை சமுதாயம் எவ்வாறு காண்கின்றது, சமுதாயம் எதை ஏற்றுக் கொள்ளும், எதனை ஏற்றுக்கொள்ளாது எனும்

தொடர்ச்சி 55ஆம்பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி தான் கொரோனா

*கலாதீ*

நம் முன்னோர்கள் வெளியே சென்று வந்தால் கை கால்களை நன்றாக சுத்தம் செய்து தான் வீட்டிற்குள் வந்தார்கள். கைகளை நன்றாகச் சுத்தம் செய்து விட்டுத்தான் சாப்பிடுவார்கள்.

மற்றவர்களைச் சந்திக்கும் போது சற்று தள்ளி நின்றே வணக்கம் சொன்னார்கள்.அதுவும் இரு கைகளையும் கூப்பி மரியாதை செலுத்தி கதைப்பார்கள்.



ஒருவரை ஒருவர் கட்டி அணைக்கும் போக்கு நம்முன்னோர்களிடம் இல்லை என்றே கூறலாம். எட்ட நின்று சமூக இடைவெளியை கடைப்பிடித்தனர்.

வீட்டில் திருமண, பூப்புனித நீராட்டு போன்ற விழாக்களில் அதிக ஆக்கள் (கும்பல்) சேர்க்காமல் நெருங்கிய உறவினர்களையும் நண்பர்களையும் அயலவர்களையும் மட்டுமே அழைத்தார்கள்.

வீட்டிலேயே சுத்தமாக செய்த உணவு களையே உண்டார்கள். பெரும்பாலும் தாங்களே கூடிச் சமைத்து பரிமாறிக் கொண்டார்கள்.

உணவிலும் மஞ்சள் பொடி, மிளகு, சீரகம், ஏலக்காய், கிராம்பு, உள்ளி போன்ற கிருமிகளை சுத்தம் செய்யும் பொருட்களை பயன்படுத்தி சமைத்தார்கள். அப்படித் தயாரிபத்த உணவுகளால் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றார்கள்.

ஆனால்... இன்று அப்படியா...? அந்நியர் வருகையோடு எல்லாம் மாறிப் போயிற்று.

ஒரு வீட்டில் அம்மன் நோய் வந்தால் வேப்பிலை கட்டி அந்த வீட்டைத் தனிமைப்படுத்தினார்கள். வீட்டிலுள்ள ஏனையோரும் சுத்தமாக இருந்து நோய் அவர்களுக்கு தொற்றிக் கொள்ளாமல் பார்த்துக் கொண்டார்கள்.

தனிமைப்படுத்தல், நோயெதிர்ப்பு சக்தி, தடுப்பூசி, மாஸ்க், கைகளைக் கழுவுதல்,ஒரு மீற்றர் இடைவெளி என்றெல்லாம் இப்போது அதிகம் பேசுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா முற்றாக ஒழிந்து போனாலும் மாஸ்க்கை தொடர்ந்து அணிந்து சுவாச நோய்களிலிருந்து விடுபடுவோம் என்றெல்லாம் நிறைய சிந்திக்கிறோம்.

கொரோனா வந்ததால் பல நல்ல எண்ணங்களும் செயல்களும் நடைபெறுவதாக உணர்கிறோம்.

எங்கள் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற நினைப்பும் அதுவே சிறந்தது என்ற கருத்தும் பிறக்கிறது.

எங்களுடைய ஆரோக்கியமற்ற அனைத்து கெட்ட பழக்கங்களையும் அழிக்க வந்த ஒரு சக்தி தான் கொரோனா என நினைக்கத் தோன்றுகின்றதல்லவா?

---

**முறைசார்...53ஆம் பக்கத் தொடர்ச்சி**

வேறுபாட்டினையும் தெளிவாக விளக்குகிறது முறைசார் கல்வி.

தொடர்ந்து தனிமனிதனுக்குரிய கௌரவம் அவனுக்குரிய சந்தர்ப்பங்களில் வழங்கப்படுகிறது. அவனது செயல்களை பாராட்டி ஊக்குவிப்பதும் தட்டிக்கொடுப்பதும் இங்கே ஒரு தனித்துவமான செயலாகும். இதன் மூலம் அவன் மென்மேலும் ஆர்வமாகவும் உற்சாகத்துடனும் திட உறுதியுடனும் ஏற்பட்டதன் மூலம் சிறந்த ஒரு சமூகப் பிரஜையாகின்றான். அவனது சிந்தனை ஆற்றல் விரிவுபடுத்தப்படுகின்றது. அறிவு சுயமாகவும் ஆட்களுக்கு வெளியில் உள்ளதுமாக நம்புகிறான். ஒருவர் படிப்படியாக கற்றுக் கொள்ள வேண்டிய உண்மைகள் திறன் களுக்கு ஒரு தர்க்க ரீதியான வரிசை நிலை உள்ளது. அதனைச் சிறு சிறு பகுதிகளாக பெற்றுக் கொள்வதற்கு முறைசார் கல்வி உறுதுணையாக உள்ளது.

நிறைவாக இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தனிமனிதன் தன்னை வளர்த்துக் கொண்டு, அவனது தனித்துவத்தை நிலைநாட்டுவதற்கும் இக்கல்வி செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு முறைசார் கல்வி ஊன்றுகோலாகின்றது. எனவேதான் முறைசார் கல்வி முறை தனிமனிதத்துவத்தின் உயர் நிலையில் நின்று செயற்பட வழிகாட்டுகின்றது. இதன் பயன் அளவிடற்கரியது. எல்லோருக்கும் சமமான கல்வியை நிலைநாட்டி தனக்கென ஒரு தனியிடத்தை இது தட்டிக் கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிந்த மரணங்கள்

சம்பூர் தாஸன் -



நீல இரவுகள்
அத்தனை--
வண்ணங்களையும்
விழுங்கி விடுவது போல்

பகல் முழுவதுமாய்
நீண்ட மரணங்கள்-
எங்கள் தேசத்தில்

காதைப் பிளக்கும்
மேளவாத்தியங்களை
இப்பொழுது-
கேட்க முடிவதில்லை

வேட்டோசை பட்டாசுகள்
வானில்
முழங்குவதில்லை--

தாலிஅறுத்தே-
பொட்டழிக்கும்
சடங்குகளில்லை...
பொலித்தீன் பைகள்
உச்சிபிரித்தே
திறக்கப்படும்-

முகம் மட்டும் பார்க்க
நொடி நேரம் அனுமதி

எரியூட்டிகள்-
ஒருபிடிச் சாம்பல் தரும்
அமரர் ஊர்தி இல்லை
சோடாப் போத்தல்கள்
திறக்கபடுவதுவுமில்லை

இதயத்தில் இருந்து
தேங்கிய கண்ணீர்
விழி வழியே-
முடிந்து போகும்..

ஒருகாலத்தில் இனித்த
கந்தளாய்-
எனும் ஒற்றைச் சொல்

மானிடரை அச்சுறுத்தி
தினம் தினம் கொல்லும்
முடிவிற்காக-
மானுடம் தவங்கிடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/G Electricals & Tool Tec





**Tel: 024 2228 117**

No: 53, Soosaipillaiyarkulam Road,
Vavuniya.

## உங்கள் வாழ்வாதாரம் உயர எம்மோடு இணையுங்கள்

வீட்டுத்தோட்டத்திற்கான உபகரணங்கள், கையினால் இயக்கக்கூடிய சிறு உழவு இயந்திரம், புல்வெட்டும் இயந்திரம், கிருமிநாசினி தெளிப்பான் அனைத்து கருவி வகைகள், மின்சாதனப் பொருட்கள், மின்பிறப்பாக்கிகள், கல்லரியும் இயந்திரம், மாபுள் கட்டர், சாணைபிடிக்கும் இயந்திரம், துளையிடும் இயந்திரம், இரும்பு, தகரம், அலுமினியம் வெட்டும் இயந்திரம், அனைத்துவித மோட்டார் வகைகள், நீரேற்றும் பம்பிகள், சிறியரக வெல்டிங், கம்ப்றஷர்கள் இன்னும் ஏராளம்.

**விற்பனைக்குப் பின்னரான எமது சேவை உங்களை மேலும் மகிழ்வூட்டும்.**

**எமது காட்சியறையை இன்றே பார்வையிடுங்கள்**

**எமது கனிவான உபசரிப்பும், நியாயமான விலையும், நிறைவான சேவையும் உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனையாக அமையும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered in the Department of Post of Sri Lanka Under No: QD/NEWS/107/2022


# K.L.N. Lanka (Pvt) Ltd



KLN PAINTING GROUP

CSC YARD

LANKA ENGINEERING GROUP

T.DISTRIBUTOR

## விற்பனை கடந்த சேவைக்காக

வீடு, அலுவலகங்கள் மற்றும் வாகனங்கங்களுக்குத் தேவையான அனைத்துவகையான NIPPON பெயின்றுகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வீடு கட்டுவதற்கான அனைத்துவகையான கட்டுமான பொருட்கள், பூச்சாடிகள், வேலித்தூண்கள், சீமேந்துக்கற்கள், வீட்டிற்கான அலங்கரிப்பு பொருட்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்துவிதமான கட்டுமானப்பணிகளையும் தங்கள் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப மிகவும் நுட்பமான முறையில் அமைத்துத்தரப்படும்.

NIPPON PAINT





### மன்னார் வீதி, குருமன்காடு, வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org